# மனித உரிமைப் பாதுகாவலர்கள் கையேடு



மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான கையேட்டின் அறிமுகம்

# மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான கையேட்டின் அறிமுகம்

மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான இந்தக் கையேடு, சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்துடன் இணைந்து கிரிசலிஸ் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட பிரிட்ஜ் (BRIDGE) திட்டத்தின் விளைவாக உருவாக்கப்பட்டது. பிரிட்ஜ் திட்டம் என்பது மனித சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் சமூகங்களை இணைக்கும் ஒரு திட்டமாகும், இது வட மாகாணத்தை உள்ளடக்கி செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அந்தக் கலந்துரையாடல்களில், அவர்கள் சமூகங்களில் தற்போது தங்களை ஆதரிக்கும் உரிமைகள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு அவர்கள் மேற்கொள்ளகின்ற அணுகுமுறைகள் குறித்து விளக்கினர். அவர்கள் தற்போது ஈடுபட்டுள்ள சேவை அணுகுமுறைகளைப் பட்டியலிடுவதன் மூலம், இந்தக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகளில் அவர்களின் அறிவில் உள்ள இடைவெளிகள் குறித்த கலந்துரையாடல்களின் போது கண்டறியப்பட்டன. மேலும், இந்தக் கலந்துரையாடல்களில், இத்துறைகள் தொடர்பான அறிவை உள்ளடக்கி, அவர்களால் எளிதில் பயன்படுத்தக்கூடிய ஒரு கையேட்டைத் தயாரிக்குமாறு கோரப்பட்டது. இதன் விளைவாக உருவான மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான கையேட்டில், சட்ட விதிமுறைகள், நடைமுறைப் பயன்பாடுகள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் அன்றாடம் பயன்படுத்தும் சேவைகளின் பணியிடங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கியுள்ளன.

இவ் வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டதாகும். இவ் வெளியீட்டின் உள்ளடக்கங்களுக்கு கிறிசலிஸ் மற்றும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) ஆகியோர் மட்டுமே முழுப்பொறுப்புடையவர்கள். அத்துடன், இவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

Funded by the European Union

Implemented by :

Chrysalis
Catalyzing change

LAW & SOCIETY TRUST

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 01 | சூழலும் சட்டமும் | 4 |
| 02 | பாலின அங்கீகாரச் சான்றிதழ் பெறுவதற்கான (GRC) வழிகாட்டி | 12 |
| 03 | தகவல் அறியும் உரிமை | 20 |
| 04 | மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் | 28 |
| 05 | குடும்ப வன்முறையைத் தடுப்பது தொடர்பான சட்டம் | 32 |
| 06 | அரச காணிகள் தொடர்பிலான உங்களது உரிமைகள் பிரஜைகளுக்கான வழிகாட்டிகள் | 40 |

# சூழலும் சட்டமும்



கசுன், இன்றைய பத்திரிகையைப் பார்த்தாயா? சூழல் மாசடைவுக்கு எதிராக சூழலைப் பாதுகாப்பதற்காக இது சார்ந்த சட்டங்களை மேலும் கடுமைப்படுத்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆமாம். அது நல்லதொரு விடயம். எமது நாட்டின் காடுகளையும் இயற்கை வளங்களையும் பாதுபாப்பதற்கு, சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் இது தொடர்பில் தற்போது அமுலிலுள்ள சட்டங்கள் எவையென்று அமலுக்கு தெரியுமா?

ஆமாம். நான் அவற்றில் சிலவற்றை அவற்றின் நடைமுறை பற்றிய உதாரணங்களுடன் கீழே குறிப்பிடுகின்றேன்.



« உள்ளடக்கத்திற்கு

இலங்கையின் உன்னதமான சட்டமாகவும் அனைத்து சட்டங்களினதும் அடிப்படையாகவும் கருதப்படும் அரசியலமைப்பில், அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்படும் 27(14) உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"சமுதாயத்தின் நன்மைக்கென அரசானது, சூழலைப் பாதுகாத்தலும், பேணிக்காத்தலும், சீராக்குதலும் வேண்டும்"**

மேலும், 28 (c) உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"இயற்கையைப் பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும் இலங்கையிலுள்ள ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும்"**

இதற்கமைய, இயற்கை வளங்கள் மற்றும் சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பானது அரசிற்கும் அதேபோன்று இந்நாட்டுப் பிரஜைகள் என்ற ரீதியில் எம் அனைவருக்கும் கையளிக்கப்பட்டுள்ளதொரு பொறுப்பாகும்.

அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பை நடைமுறைப்படுத்துவதற்கும், பொதுமக்கள் என்ற ரீதியில் எம் ஒவ்வொருவருக்கும் இப்பொறுப்புடனான பிணைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட ஏராளமான சட்டங்கள் இந்நாட்டில் நடைமுறையிலுள்ளன. இதன் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள ஏராளமான சூழல்சார் குற்றங்களும், சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளும் இப்பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான பல நிறுவனங்களும் காணப்படுகின்றன. இதில் சிலவற்றைப் பற்றி கீழே கலந்துரையாடப்படுகின்றன.

கைத்தொழிற்சாலைகளிலிருந்து சூழலுக்கு கழிவுகளை அகற்றுவது இன்று ஒரு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இது தொடர்பாக நிலவும் சட்ட ரீதியான நிலைமை பற்றி அமலுக்குத் தெரியுமா?

ஆமாம். இது தொடர்பில் சட்டம் இவ்வாறுதான் செயற்படுகின்றது.



## கைத்தொழில்களுக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்

யாதேனும் ஒரு கைத்தொழிலின் செயற்பாட்டினால் வெளியேற்றப்படும் கழிவுகள் சூழலுக்கு அகற்றப்படுமாயின், மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் (1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சூழல் (திருத்தச்) சட்டத்தின் 23 (அ)

கழிவுகள் என்பதில்- திண்மக் கழிவுகள், திரவக் கழிவுகள், வாயு உமிழ்வுகள் மற்றும் சப்தம் போன்ற அனைத்தும் உள்ளடங்குகின்றன. இக்கழிவுகளை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டவாறு முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கள ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் விதப்புரைகளுக்கு அமைவாக குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் விதப்புரைகளுக்கு ஏற்ப இசைந்தொழுகியவாறு கைத்தொழிலை மேற்கொள்ளுதல் வேண்டும். (1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சூழல் (திருத்தச்) சட்டத்தின் 23 (ஆ) பிரிவு. குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் காலஎல்லையின் இறுதியில் தொடர்ந்தும் குறிப்பிட்ட கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்லும் பட்சத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்கையில் காணப்படாத ஒரு மாற்றத்தை அல்லது விரிவாக்கலை மேற்கொள்ளும் பட்சத்தில் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல் வேண்டும். இவ்வாறு செய்யாது கைத்தொழில் முன்னெடுக்கப்படுமாயின் அல்லது அனுமதிப்பத்திரத்தில் காணப்படும் நிபந்தனைகள் மீறப்படுமாயின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு முடியும். (1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சூழல் (திருத்தச்) சட்டத்தின் 23 (ஈ) பிரிவு.



## காடுகள் தொடர்பாக அமுலிலுள்ள சட்டங்கள்

வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் காணப்படும் காடுகளின் வகைகள்.



### பாதுகாக்கப்பட்ட காடுகள்

1995ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 3வது பிரிவின் கீழ் அமைச்சரால் பாதுகாக்கப்பட்ட காடுகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தனித்துவமான சூழல் தொகுதிகள், உயர் உயிரியல் பன்முகத்தன்மையைக் கொண்டுள்ள மற்றும் அரிதான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் கொண்டுள்ள காடுகள்.



### ஒதுக்கப்பட்ட காடுகள்

1995ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 3வது பிரிவின் கீழ் அமைச்சரால் ஒதுக்கப்பட்ட காடென பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காடுகள்.



### கிராமியக் காடுகள்

கிராமப்புற மக்களின் வனத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் பாதுகாக்கப்பட்ட காடென பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காடுகள்



### ஏனைய அரச காடுகள்

மேற்குறிப்பிட்ட 3 வகைக்குள் அடங்காத அரச நிலங்களில் அமைந்துள்ள காடுகள்.

## ஒவ்வொரு வகைப் காடுகளுக்குள்ளும் குற்றங்களாகக் கருதப்படும் செயல்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள்.

| காட்டு வகை | குற்றம் | தண்டனை |
|---|---|---|
| பாதுகாக்கப்பட்ட காடுகள்<br><br>(1907ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 6 (2) (1) பிரிவு | அனுமதிப் பத்திரம் இன்றி அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல்<br>• தாவரங்கள் மற்றும் விலங்குளை அவதானித்தல்<br>• அத்துமீறி நுழைதலும் தங்கியிருத்தலும்<br>• மரங்களை வெட்டுதல், மரப்பட்டைகளை உரித்தல், கிளைகளை வெட்டுதல், காட்டை அழித்தல் அல்லது தாவரப் பகுதிகளுக்கு சேதம் விளைவித்தல், அவற்றை வைத்திருத்தல், காட்சிப்படுத்துதல் அல்லது விற்பனை செய்தல்.<br>• கால்நடைகளை உட்செலுத்துதல், புல் வெட்டுதல் அல்லது அந்தப் புற்களை கால்நடைகளுக்கு வழங்குதல்.<br>• காட்டிலுள்ள நீரோடைகளைத் தடுத்தல்<br>• சுரங்கம் தோண்டுதல் அல்லது கனிமங்களை அகற்றுதல்.<br>• வேட்டையாடுதல் அல்லது அதற்காக பொறி வைத்தல்<br>• துப்பாக்கியால் சுடுதல் அல்லது விலங்குகளின் இனப்பெருக்க இடங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எச்செயலையும் செய்தல். விலங்குகளை விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல் | • 7 வருடங்களுக்கு மிஞ்சாத சிறை தண்டனை அல்லது ரூ. 20,000/- முதல் ரூ. 200000/- இடைப்பட்ட அபராதம் அல்லது இவ்விரண்டும்<br>• மற்றும் இதற்கு மேலதிகமாக<br>• இழைக்கப்பட்டுள்ள சேதத்துக்கான நஷ்டஈட்டை செலுத்துமாறு கட்டளையிடுதல் |

| காட்டு வகை | குற்றம் | தண்டனை |
|---|---|---|
| | • தாவரங்கள் அல்லது விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பொருட்களைப் பயனப்படுத்துதல் அல்லது வைத்திருத்தல்.<br>• விலங்குகளின் முட்டைகள் அல்லது கூடுகளை அழித்தல் அல்லது வைத்திருத்தல்.<br>• நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடங்களை அமைத்தல் அல்லது குடியேறுதல். விவசாயம் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகளுக்காக மண் நடவடிக்கைகளுக்காக மண் விளைவித்தல், குழிகள் தோண்டுதல் அல்லது நிலத்தை துப்பரவு செய்தல்.<br>• தீ வைத்தல் அல்லது தீ பரவுவதற்கு இடமளித்தல்.<br>• எல்லைகளைக் குறிக்கக் கட்டப்பட்ட சுவர், அகழி, வேலி,பெயர்ப்பலகை, சமிக்ஞைப் பலகை அல்லது எல்லை அடையாளங்களுக்கு சேதம் விளைவித்தல், அகற்றுதல் அல்லது மாற்றம் செய்தல். | |
| ஒதுக்கப்பட்ட காடுகள் (1907ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 7 (1)வது பிரிவு) | • அத்துமீறி நுழைதலும் தங்கியிருத்தலும்<br>• கால்நடைகளை உட்செலுத்துதல், புல் வெட்டுதல் அல்லது அந்தப் புற்களை கால்நடைகளுக்கு வழங்குதல்.<br>• மரங்களை வெட்டுதல், கிளைகளை வெட்டுதல், காட்டை வெட்டித் துப்பரவு செய்தல், தேவையென்றே அல்லது கவனமின்மையால் மரங்களின் பட்டைகளை உரித்தல் அல்லது தாவரப் பகுதிகளுக்கு சேதம் விளைவித்தல் --காட்டிலுள்ள நீரோடைகளைத் தடுத்தல்<br>• தாவரத்தை அல்லது தாவரப் பகுதியை பிடுங்குதல், அழித்தல், சேதம் விளைவித்தல், அவற்றை, காட்சிப்படுத்துதல் அல்லது விற்பனை செய்தல்.<br>• விலங்குகளை கொல்லுதல், கொல்லுவதற்கு முயற்சித்தல், பிடித்தல், பிடிப்பதற்கு முயற்சித்தல், ஏற்றிச் செல்லுதல், துப்பாக்கியால் சுடுதல், பொறி வைத்தல் அல்லது விலங்குகளின் வாழ்விடங்களை சேதப்படுத்தல்<br>• கருங்கல் உடைத்தல், சுண்ணாம்புக்கல் அல்லது நிலக்கரிக்கு தீ வைத்தல், கனிம வகைகள், இரத்தினக்கல், மணல், மண் அகழ்தல், ஏற்றிச் செல்லல், வைத்திருத்தல்.<br>• தீ வைத்தல் அல்லது தீ வைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய பொருட்களை வைத்திருத்தல் அல்லது தீ பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை<br>• மரங்களை வெட்டுதல், அறுத்தல், ஏற்றிச் செல்லல் மரங்களை அறுப்பதற்கான இடங்களை அமைத்தல் அல்லது அறுப்பதற்காக குழிகளை தோண்டுதல். விவசாயம் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைக்காக மண் அடுக்குகளுக்கு சேதம் ஏற்படுத்தல், குழிகளை தோண்டுதல் அல்லது வெட்டித் துப்பரவு செய்தல்<br>• பாதைகளை அமைத்தல் அல்லது அத்தகைய பாதைகளைக் பயன்படுத்துதல் | • 5 வருடங்களை மிஞ்சாத சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000/= இற்கும் ரூ.100,000/= இற்கும் இடைப்பட்ட அபராதம் அல்லது இந்த இரண்டும்<br>• இழைக்கப்பட்டுள்ள சேதத்துக்கான நஷ்ட ஈட்டை செலுத்துமாறு கட்டளையிடுதல் |
| கிராமியக் காடுகள் (1907ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12வது பிரிவு) | • நீரில் விசம்-கலத்தல், தீஅல்லது வேறு வழிமுறையில் இலுப்பை, அகேயா, அலு, வில்வம், தான்றி, முதிரை, ஈரப்பலா, காட்டுப்பலா, நந்தியாவட்டை, விளாமரம், புன்னை, துன், எலகெடோல், அத்தெமட்ட, தைலமரம், வேங்கை, சீமைஅகத்தி, சவிக்கை, வெடிவேம்பு, சுபாபுல், கண்டல், கிண்ணை, வேம்பு, பலா, மருதம், மலைவேம்பு, இல்கடோல், மல்மார, வென்டோரா, இலுப்பை, காட்டு ஆமணக்கு, மீதல்ல, நாக மரம், கருந்துகை, நெல்லி, பாலை, பிஹிம்பியா, பைன் மரம், தூங்குமூஞ்சி, புன்கரந்த, ஏழிலைப் பாலை, செண்பகம், கிளசபு புளியமரம், | 1-12 மாதங்களுக்கு இடைப்பட்ட சிறைத்தண்டனை அல்லது ரூ.1,000/= - ரூ.5,000/= இற்கு இடைப்பட்ட தண்டனை அல்லது இவை இரண்டும். |

| காட்டு வகை | குற்றம் | தண்டனை |
|---|---|---|
| | கருவாகை, தேக்கு, திருக்கொன்றை, காட்டுச் செண்பகம், வாவரணை இந்த மரங்களை வெட்டடுதல், சேதப்படுத்தல் மற்றும் குறிப்பிட்ட மரங்களை அறுத்தல்.<br>• அமைச்சரால் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடுதல். | |
| ஏனைய அரச காடுகள் (மேற்குறிப்பிட்ட 3 வகைக்குள் அடங்காத அரச நிலங்களில் அமைந்துள்ள காடுகள்) (1907ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 20வது பிரிவு) | • அமைச்சரால் குறிப்பிட்டதொரு காடு தொடர்பில் மேற்கொள்ளப்படும் கட்டளைகளின் கீழ் அன்றி வேறு விதத்தில் காடுகளுக்கு தீவைத்தல், மண்ணுக்கு சேதம் ஏற்படுத்தல் அல்லது கால் நடை வளர்ப்பில் ஈடுபடுதல்.<br><br>பின்வரும் விடயங்கள் மீது அமைச்சருக்கு கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.<br><br>• யாதேனும் குறிப்பிட்டதொரு காடு தொடர்பில் முதிரை, ஈரப்பலா, காட்டுப்பலா, துன், தும்பல துன், வேங்கை, ஹல், சவிக்கை, ஹோர, வெடிவேம்பு, கடும்பேரிய, கருங்காலி, கீன, வேம்பு, பலா, மலை வேம்பு, மஹோகனீ, காட்டாமணக்கு, நாக மரம், கருந்துவை, பாலை, பிஹிம்பியா, செண்பகம், கருவாகை, புளியமரம், வெள்ளைச்சந்தனம், பனை, தெவன்ன, தேக்கு, உம்பேரிய, காட்டுச் செண்பகம், காட்டு இலுப்பை மற்றும் வாவரண ஆகிய மரங்களை வெட்டுவதை தடை செய்தல், வளரும் காடொன்றில் மரங்களை வெட்டுவதை தடை செய்தல் அல்லது அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல். | • 2 வருடங்களுக்கு குறைந்த சிறைத்தண்டனை அல்லது ரூ.50,000/= இற்குக் குறைந்த தண்டனை அல்லது இவை இரண்டும்.<br><br>• மற்றும் இதற்கு மேலதிகமாக இழைத்துள்ள சேதத்துக்கான நஷ்ட ஈட்டை செலுத்துவதற்கு கட்டளையிடுதல். |




## அனுமதிப்பத்திரமின்றி ஏற்றிச் செல்லக் கூடிய மர வகைள் (2008~05~09ஆந் திகதி 1548/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி)

தென்னை, கமுகு, இறப்பர், மரமுந்திரிகை, வளர்க்கப்பட்ட கறுவா, கொட்டம்பா(தல்லித்தே), பூவரசு, இலவம், வளர்க்கப்பட்ட மாமரம், கித்துல், பூவரசம், அபரல்லா, சீமை அகத்தி, முல்லிலவு, சவுக்குமரம், மலை வேம்பு, சபுக்கு, ரம்புட்டான், சுபாபுல், கெந்த மரம், காட்டுச் செண்பகம், எட்டி, முள்ளு முருக்கு, ஏழிலைப் பாலை, யானைக் கொய்யா, மெல்லிய பலகை தயாரிப்புகள், பிரம்பு பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட அறுக்கப்பட்ட மரம்,

## விசேட நிலைமைகளின் கீழ் ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மரங்கள் மற்றும் பிரதேசங்கள்

| மர வகை | அனுமதிப் பத்திரமின்றி ஏற்றிச் செல்லக் கூடிய பிரதேசங்கள் |
|---|---|
| மஹோகனி / முதிரை/ தேக்கு / வேம்பு | கொழும்பு மாவட்டம் |
| இயுகெலிப்டஸ் வகை | கொழும்பு/ கம்பஹா/ களுத்துறை/ மாத்தளை/ காலி/ மன்னார்/ வவுனியா/ முல்லைத்தீவு/ கிளிநொச்சி/ குருநாகல்/ இரத்தினபுரி/ கேகாலை மாவட்டங்கள் |
| டுனா | கண்டி/ நுவரெலியா/ பதுள்ளை/ இரத்தினபுரி தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் |
| கிளிசபு | கண்டி மாவட்டம் |
| கருங்காலி/ களுமெதிரிய/ வெள்ளைச் சந்தனம் மற்றும் ஏனைய அனைத்து வகையிலுமான அறுக்கப்பட்ட மரங்கள், வட்டக் கம்பங்கள் மற்றும் விறகு | நாட்டினுள் அமைந்துள்ள அனைத்து மாநகர சபை பிரதேசங்கள், ஹங்வல்ல மற்றும் பாதுக்கை பிரதேச செயலகம் தவிர்ந்த கொழும்பு மாவட்டம் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரமின்றி ஏற்றிச் செல்லக் கூடிய சந்தர்ப்பங்களில், மேற்குறிப்பிட்ட மர வகைகளைத் தவிர ஏனைய அனைத்து மர வகைகளையும் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமானதாகும். பிரதேச செயலாளர் (கிராம உத்தியோகத்தர் மற்றும் காட்டு வீச்சு வன உத்தியோகத்தர்களின் விதப்புரையின் மீது) அனுமதிப் பத்திரங்களை வழங்குவதுடன், விண்ணப்பதாரியின் காணி உரிமையை உறுதிப்படுத்துதல், ஏற்றிச் செல்லும் வாகனத்தின் பதிவு இலக்கம் மற்றும் ஏற்றிச் செல்லப்படும் வீதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் திகதியில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

கசுன், இலங்கையில் சில அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் முன்னதாகப் பெற வேண்டிய மதிப்பீட்டு அறிக்கைகள் பற்றி உமக்கும் தெரியுமா?

ஆமாம், நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அறிக்கைகளைப் பெறுவதால் அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடைவதாக சிலர் கூறுகிறார்கள். ஆனால், அந்த தாமதத்தைவிட நீண்ட கால அடிப்படையில் பார்க்கும்போது நாட்டுக்கும் மக்களுக்கும் இது ஒரு முற்போக்கான நடவடிக்கையாகும். அமல், அந்த செயல்முறை பற்றி எனக்கு விளக்க முடியுமா?

ஆமாம், நான் அதை தெளிவுபடுத்துகிறேன்.



## சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் பிரிவு 23 (அ)

பெரிய அளவிலான திட்டங்கள் மற்றும் சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவது கட்டாயமாகும். (1993—06-24ஆந் திகதியிட்ட 777/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிக்கை)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை அவசியமான திட்டங்கள் (2008-01-25ஆந் திகதியிட்ட 1533/16ஆம் இலக்க வர்த்தமானி)

- கடற்கரையிலிருந்து 300 மீற்றர் நிலப்பரப்பிற்குள் அல்லது கடலில் 2.கி.மீ. வரையான பரப்பிற்குள் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்
- தேசிய வன ஒதுக்கத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான திட்டங்கள்
- சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்கள்
- உணர்திறன் மிக்க சூழல் வலயங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

திட்டம் செயற்படுத்தப்படும் இடத்தைப் பொறுத்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கடலோரப் பாதுகாப்பு திணைக்களம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று, திட்டத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து அறிவிக்கும். திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனம் ஆலோசனை நிறுவனத்திடமிருந்து சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்த பின்னர், அது 30 நாட்களுக்கு பொதுமக்களின் கருத்துக்களுக்காக திறக்கப்படும். அதேநேரம், அந்த அறிக்கை தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவுக்கும் அனுப்பி வைக்கப்படும். பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் தொழிநுட்ப குழுவின் விதந்துரைக்கு அமைய சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவாறு திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படும். அந்த சூழல் பாதிப்பைக் குறைக்கும் வகையில் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அந்த நிபந்தனைகள் மீறப்பட்டால், வழங்கப்பட்ட அனுமதி இரத்துச் செய்யப்படலாம்.




« உள்ளடக்கத்திற்கு

# பாலின அங்கீகாரச் சான்றிதழ் பெறுவதற்கான (GRC) வழிகாட்டி

அனன்யா: (பெண்) - 26 வயது மதிக்கத்தக்க ஒரு திருநங்கை (transwoman) Gender Recognition Certificate (GRC) என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டு, தன்னுடைய பயணத்தை தொடரவேண்டும். இவர் களுபோலில பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

பிரசாந்த் – (ஆண்) - 35 வயது மதிக்கத்தக்க திருநம்பி (transman) இரண்டு (02) ஆண்டுகளுக்கு முன்னர் GRC ஐப் பெற்றுக் கொண்டுள்ள இவர் தற்போது மக்களுக்கு வழிகாட்டி வருகிறார்.

« உள்ளடக்கத்திற்கு

## GRC என்றால் என்ன?

பிரசாந்த் அண்ணா GRC பற்றி எனக்கு சொல்லுங்கள். எங்கிருந்து தொடங்குவது என்று எனக்கு புரியவில்லை?

2016ஆம் ஆண்டின் 01 இலக்க மற்றும் 24/2016 “சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம்” மூலம் “பால்நிலை (பாலின) அங்கீகார சான்றிதழ்” பெறுவதற்கான சான்றிதழ், அதாவது GRC அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்ற ஒரு அதிகாரப்பூர்வ ஆவணம். இந்த அதிகாரப்பூர்வ ஆவணத்தை வைத்துக்கொண்டு உங்களுடைய பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் உங்களுடைய கல்விச் சான்றிதழ்கள், கடவுச்சீட்டு போன்ற சட்ட ரீதியான ஆவணங்களில் மாற்றத்தைச் செய்துகொள்ள முடியும்.



## தகமைகள்

எனக்கும் GRC ஐப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லவா அண்ணா?

ஆம் உங்களுக்கு முடியும். நீங்கள் "ஆகக்குறைந்த வயது 16" ஐக் கடந்திருந்தால் General Circular 01-34-2016 என்ற ஒழுங்கு விதிக்கு அமைவாக பெற்றுக் கொள்ளலாம். அப்படி இல்லாவிட்டால், நாம் அனைவரும் அறிந்துள்ள வகையில் GRC சுற்றறிக்கை பிரகாரம் உங்களுடைய தனிப்பட்ட விருப்பத்திற்கு அமைய விண்ணப்பிக்கலாம். முக்கியமாக தெரிந்து கொள்ளவேண்டியது "சத்திரசிகிச்சை செய்து கொள்வதற்கு ஒருபோதும் GRC கட்டாயமானது அல்ல". இருந்தபோதிலும், GRC உங்கள் வசம் இருந்தால் மற்ற இடையூறுகளைத் தவிர்த்துக் கொள்ள அது சிறந்த வழியாக இருக்கும்.



## GRC பெறும் செயல்பாடு கட்டம் கட்டமாக

GRC ஐப் பெற்றுக் கொள்ள நான் எங்கே செல்லவேண்டும்?

இலங்கையில் உள்ள ஒரு சில வைத்தியசாலைகளில் மாற்றுப் பாலின சிகிச்சை கிளினிக்குகள் இயங்கி வருகின்றன. களுபோவில, பேராதனை, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், இரத்தினபுரி மற்றும் அங்கொட ஜேஆர் நவோதய நிலையம் அவற்றுள் பிரதானமானவை.



கட்டம் 01

நீங்கள் வைத்தியசாலையில் உள்ள மனநல மருத்துவ கிளினிக்கில் பதிவு செய்ய வேண்டும்.

கட்டம் 02

மனநல வைத்திய நிபுணரின் பரிசோதனை - இந்த செயல்பாடு பொதுவாக ‘‘06 மாதங்கள் தொடக்கம் 02 வருடங்கள் வரையான காலப்பகுதியை கொண்டதாக இருக்கும். சம்பந்தப்பட்ட வைத்தியர் உங்களுடைய பாலின அடையாளத்தை உறுதி செய்வார்.

கட்டம் 03

தேவை ஏற்பட்டால் ஹார்மோன் சிகிச்சைக்காக உட்சுரப்பியல் நிபுணர் **(Endocrinologist)** ஒருவரிடம் அனுப்பப்படலாம்.

கட்டம் 04

அதன் பின்னர் வைத்தியசாலை பணிப்பாளரின் கையொப்பத்துடன் GRC வழங்கப்படும்

கட்டம் 05

அதன் பின்னர் GRC உடன் பத்தரமுல்லையில் உள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்குச் சென்று பிறப்புச் சான்றிதழில் மாற்றத்தை செய்து கொள்ள முடியும்.

கட்டம் 06

பின்னர் ஆட்பதிவு திணைக்களத்திற்குச் சென்று மாற்றுப் பாலியல்புக்கு ஏற்றவாறு புதிய தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



## தேவையான ஆவணங்கள், கட்டணங்கள் மற்றும் காலம்



ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு எந்தெந்த ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்? எவ்வளவு பணம் செலவாகும் அண்ணா?

நீங்கள் இந்த ஆவணங்களை எடுத்துச் செல்லுங்கள்

- வைத்தியசாலை ஆவணம் (OPD குறிப்பு)
- மனநல விசேட வைத்திய நிபுணரின் அறிக்கை
- வைத்தியசாலையில் வழங்கப்பட்ட GRC சான்றிதழ்
- பழைய பிறப்புச் சான்றிதழ் தேசிய அடையாள
- தேசிய அடையாள அட்டை
- திணைக்களத்தின் விண்ணப்பம்

கட்டணம்:

அரசாங்க வைத்தியசாலைகளில் GRC இலவசமாக வழங்கப்படுகிறது.

காலம்:

மதிப்பீட்டு காலம் 06 மாதம் தொடக்கம் 02 ஆண்டுகள் வரை இருக்கக்கூடும். முழுமையான செயற்பாட்டுக்கு 2-3 வருடங்கள் ஆகலாம்.

# ஹார்மோன் சிகிச்சை பற்றிய முக்கியமான அறிவித்தல

ஹார்மோன் சிகிச்சை பற்றி சொல்லுங்கள் அண்ணா.

ஹார்மோன் சிகிச்சை பற்றி முக்கியமான ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். நாங்கள் எந்த ஒரு விடயமாக இருந்தாலும் வைத்தியரின் ஆலோசனை இன்றி ஹார்மோன் சிகிச்சை பெறுவதற்கு சிபாரிசு செய்யமாட்டோம். அது மிகவும் ஆபத்தானதாக அமைந்துவிடலாம்.'

அப்படியானால் ஹார்மோன்களை எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும்?



பிரசாந்த்: கிளினிக்குகளில் உள்ள மனநல விசேட வைத்திய நிபுணர்கள் 'உங்களை உட்சுரப்பியல் நிபுணர் **(Endocrinologist)**' களிடம் அனுப்புவார்கள். ஹார்மோன் சிகிச்சை பெறுவதற்கு அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும்.

திருநம்பிகளுக்கு டெஸ்டோஸ்டிரோன் அளிக்கப்படும். இதனால்

- குரல் தடித்த குரலாக மாறும்
- முகத்திலும் உடலிலும் ரோமங்கள் முளைக்கலாம்
- மாதவிடாய் நின்று போதல்
- தசை வளர்ச்சி

திருநங்கைகளுக்கு ஈஸ்ட்ரோஜன் அளிக்கப்படும். இதனால்,

- மார்பகங்களில் வளர்ச்சி ஏற்படலாம்
- சருமம் மிருதுவாகும்
- உடலில் கொழுப்பு சேரலாம்
- ஆண்குறி வீரியம் அடைதல் குறையலாம்

அடுத்த முக்கிய அம்சம் இவ்வாறான மாற்றங்கள் நிகழ்வதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் ஆட்களைப் பொறுத்து வேறுபடலாம். ஒவ்வொருவரும் கொண்டிருக்கின்ற உடல் ரீதியான மாற்றங்களே இதற்கு காரணம்.



## சத்திர சிகிச்சை பற்றிய சுருக்கமான குறிப்பு



அண்ணா என்ன விதமான சத்திர சிகிச்சைகள் காணப்படுகின்றன?

திருநம்பிகளாக மாறும் நபர்களுக்கான சத்திர சிகிச்சைகளின் பெயர்கள்

- மேல் நிலை சத்திரகிசிச்சை **(Top Surgery)** மார்பகங்களில் காணப்படுகின்ற இழையங்களை அகற்றும் சத்திர சிகிச்சை
- ஹிஸ்டரெக்டமி **(Hysterectomy)** - கருப்பையை அகற்றும் சத்திர சிகிச்சை
- பலோபிலாஸ்டி / மெட்டாய்டியோபிலாஸ்டி - ஆண் இனப்பெருக்க உறுப்பு (ஆண்குறி) உருவாக்கம்

திருநங்கையாக மாறும் நபர்களுக்கான சத்திரசிகிச்சை

- மார்பக விரிவாக்க சத்திரசிகிச்சை **(Breast Augmentation)**
- வெஜினோபிலாஸ்டி **(Vaginoplasty)**

சத்திரசிகிச்சை செய்யப்படும் இடங்கள்
இலங்கையில் உள்ள அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகள்

வெளிநாடு:
தாய்லாந்து, இந்தியா, சிங்கப்பூர், துருக்கி



## சத்திர சிகிச்சைக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் சிகிச்சை (சுருக்கமாக)



அண்ணா சத்திரசிகிச்சை செய்து கொள்வதற்கு முன்னர் என்னென்ன செய்ய வேண்டும்?

சத்திர சிகிச்சைக்கு முன்னர் தயாராக வேண்டும். அதில் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன

1. வைத்தியரைச் சந்தித்தல்: சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் வைத்தியரை (சத்திர சிகிச்சை நிபுணர்) சில தடவைகள் சந்தித்து சத்திர சிகிச்சை பற்றி கலந்துரையாட வேண்டும்.

2. மருத்துவ பரிசோதனை: குருதி பரிசோதனை, கல்லீரல் / சிறுநீரகம் போன்றவற்றின் செயற்பாட்டை பரிசோதித்து சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு பொருத்தமான நிலையில் அவை காணப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

3. ஹார்மோன் சிகிச்சை: பெரும்பாலான சத்திர சிகிச்சைகளுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு முன்னர் ஹார்மோன்களை நிறுத்த வேண்டும். அதனால், வைத்தியரின் ஆலோசனை படி செயற்படுவது நல்லது.

4. வாழ்க்கை முறை மாற்றம்: புகைப்பிடித்தல், மது அருந்துவதை குறைத்துக் கொள்ள வேண்டும். முற்றாக நிறுத்தி விடுவது நல்லது.

5. உடல் ரீதியாக தயாராதல்: குணமடைவதற்கு போதுமான விடுமுறையை (ஓய்வு) எடுத்துக் கொள்ளவேண்டும். தேவையான பொருட்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்

# சத்திர சிகிச்சைக்கு பின்னரான கவனிப்பு (சுருக்கமாக)



சத்திர சிகிச்சை செய்து கொண்ட பின்னர் நாம் எப்படி கவனமாக இருக்க வேண்டும்?

சத்திர சிகிச்சையின் பின்னர் செய்ய வேண்டியவை பற்றி கூறுங்கள்?

1. காயம் ஆறுவதற்கான சிகிச்சை:
- காயம் உள்ள இடத்தை உலர்ந்த நிலையிலும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.
- உரிய நேரத்தில் கட்டுத் துணி(பெண்டேஜ்)ஐ மாற்ற வேண்டும்.

2. மருந்துகள்:
- உரிய நேரத்தில் வலி நீக்கி மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- நுண்ணுயிர்க் கொல்லி(என்ரிபயோட்டிக்) மருந்துகளை பூரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. விசேட அறிவுறுத்தல்கள்:
- மேல்நிலை சத்திர சிகிச்சை: எல்லா நேரங்களிலும் அழுத்த ஆடைகளை அணிந்திருங்கள்.
- யோனிவழி சீரமைப்பு ஒவ்வொரு நாளும் முறையாக டைலேசன் செய்ய வேண்டும

4. கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்!
- காய்ச்சல், கடுமையான வலி, காயத்திலிருந்து சீழ் வடிதல் போன்ற அசாதாரண நிலைமைகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும்.
- சத்திர சிகிச்சைக்கு பின்னரான வைத்தியர் சந்திப்புகளுக்குச் செல்ல வேண்டும்.

5. துப்புரவேட்பாடு:
- காயம் உள்ள இடத்தை நனைக்க வேண்டாம்.
- எப்போதும் கைகளை கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.
- உள்ளாடைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளுங்கள்.



« உள்ளடக்கத்திற்கு

# GRC செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கும்போது நிராகரிப்பு அல்லது பாரபட்சமாக கவனிக்கப்பட்டால்



ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் என்ன செய்வது?

நீங்கள் நிராகரிக்கப்பட்டால்

- வேறொரு வைத்தியரைச் சந்தியுங்கள் (இன்னுமொரு வைத்தியரைச் சந்தித்து அவரின் கருத்தைப் பெறலாம்)
- வேறொரு வைத்தியசாலைக்கு செல்லுங்கள்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) வில் முறைப்பாடு செய்யுங்கள்

பாரபட்ச கவனிப்பு

**HRCSL:** கட்டணம் அளவிடப்படுவதில்லை. முற்றிலும் இலவசம், சட்டத்தரணிகள் தேவையில்லை, கால வரையறை இல்லை.

**FR** மனு:
உரிமை மீறப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்ய முடியும். இதற்கு ஒரு வழக்கறிஞரின் உதவி பயனுள்ளதாக இருக்கும். இல்லையெனில், நீங்களே மனுவை சமர்ப்பிக்க முடியும்.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு
2022 பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் கீழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம்.



## இறுதியாக

அண்ணா, எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துச் சொன்னீர்கள், அதற்கு மிக்க நன்றி. விசேடமாக, வைத்தியரின் ஆலோசனை பெறாமல் ஹார்மோன்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என நீங்கள் சொன்னது மிக மிக முக்கியமானது.

ஆம். அது மிகவும் முக்கியமானது. இந்த விடயங்கள் எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- சத்திர சிகிச்சை **GRC** பெற கட்டாயமானது அல்ல.
- **GRC** வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்கப்படும்.
- வைத்திய ஆலோசனை இன்றி ஹார்மோன் பெறுவதற்கு சிபாரிசு செய்யப்பட மாட்டாது.
- சத்திரசிகிச்சை செய்து கொள்வதற்கு முன்னரும் செய்து கொண்ட பின்னரும் கவனிப்பு அவசியம்.
- சத்திர சிகிச்சையை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் செய்து கொள்ள முடியும்.
- பாரபட்சமாக கவனிக்கப்பட்டால் **HRCSL**, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம்
- உங்களுக்கு உதவுவதற்கு நிறுவனங்கள் உள்ளன.



நான் வைத்தியசாலைக்கு நாளைய தினமே சென்று விசாரிப்பேன். நன்றி பிரசாந்த் அண்ணா!

உங்கள் பயணத்திற்கு நல்வாழ்த்துகள்.! நீங்கள் தனியாக இல்லை. முற்றும்.



« உள்ளடக்கத்திற்கு

# தகவல் அறியும் உரிமை

பிரசை ஒவ்வொருவரும் ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில், அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டுள்ளார். (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம்)



வணக்கம், எனது பெயர் நிஷா. நான் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சமுதாயத் தலைவர்.

2021 ஆம் ஆண்டில், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் எத்தனை சமுர்த்திப் பயனாளர்கள் உள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் சமுர்த்திப் பயனாளர்களின் பெயர் விபரங்களைக் கொண்ட பட்டியல் மற்றும் சமுர்த்தி கிடைக்கப்பெறாத பயனாளர்களின் பெயர் விபரங்களை கொண்ட பட்டியல் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் எமது சமுதாயம் விரும்புகின்றது. நான் அதற்காக தகவலுக்கான கோரிக்கை ஒன்றை முன்வைக்கவுள்ளேன்.

## நான் முதலில் என்ன செய்யவேண்டும்

### படிமுறை 1 – பகிரங்க அதிகாரசபையை இனங்காணல்

பொது அதிகாரமானது கரைச்சி பிரதேச செயலகம் ஆகும்

### படிமுறை 2 – RTI கோரிக்கையின் வரைவைத் தயாரித்தல்

எழுத்து மூலமாகவும் (இலத்திரனியல் எழுத்துகளை உள்ளடக்குகின்றது), வாய்மூலமாகவும்

கோரிக்கை விடுப்பது,

- குழு ஆயின் - பெயர்ப்பட்டியலைப் பின்னிணைக்குக.
- “பிரசையாயின்” - கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழாத்தை உள்ளடக்குகின்றது. (பிரிவு. 43 – பொருள்கோடல் வாசகம்)

(நிரப்பப்பட்ட RTI மேன்முறையீட்டுப் படிவம் ஒன்று தொடர்பாக 6 ஆம் பக்கத்தை பார்க்கவும் )



## படிமுறை 3

**பொது அதிகாரசபையின் தகவல் அதிகாரிக்கு RTI கோரிக்கையை சமர்ப்பித்தல் - பிரிவு - 24(1)**



- நேரில்
- பதிவு அஞ்சல் மூலம்
- மின்னஞ்சல் மூலம்

இதைச் செய்ய முடியும்

சமர்ப்பித்தமைக்கான சான்றை வைத்திருக்கவும்

### பதில் ஒன்றிற்காகக் காத்திருத்தல்

பொதுவாக 14 வேலை நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும்

அதிக காலம் தேவைப்படின் – மேலும் 21 வேலை நாட்கள் அவர்கள் 21 நாட்களில் பதிலளிக்க வேண்டும்

ஒரு பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் தகவல் சம்பந்தப்படுகின்றவிடத்து – 48 மணித்தியாலங்கள்

(பிரிவு 25(3) )



நிஷாவுக்குத் தகவல் கிடைத்ததும், அவர் அதைச் சமூகத்துடன் பகிர்ந்துகொள்வார்.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவளுக்குத் தகவல் கிடைக்காதபோது அல்லது பதில் கிடைக்காதபோது அவர் பின்வரும் வழிமுறைகளை கையாழ்வார்

### தகவல் கிடைக்காததற்கான காரணம்

- அத்தகைய தகவல் 5 ஆம் பிரிவின் *கீழ் அளிக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது (31(1)(ஆ))
- இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்படும் நேரவரையறையுடன் இணங்கியொழுகாமை (31(1)(இ))
- பூர்த்தியற்ற, தவறாக இட்டுச்செல்லும், அல்லது பொய்யான தகவலின் அளிப்பு (31(1)(ஈ))
- மேன்மிகையான கட்டணம் விதித்தல் (31(1)(உ))
- கோரப்பட்ட வடிவத்தில் தகவல் வழங்குவதற்கு மறுப்பு (31(1)(ஊ))
- தகவலானது உருக்குலைக்கப்பட்டுள்ளது, அழிவடையச் செய்யப்பட்டுள்ளது, அல்லது தவறாக இடச்செய்யப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைப் பிரசை கொண்டிருத்தல் (31(1)(எ))



நிஷாவினால் கோரப்படும் தகவலை மறுப்பதற்கான காரணங்கள் சில ஏற்பாடுகளில் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மறுக்கப்படுவதற்கான அக்காரணங்கள் பின்வருமாறு அமையலாம்

*பிரிவு 5 - தகவல்களை அணுகுவதை மறுப்பதற்கான காரணங்கள் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன: இருப்பினும், அதற்கும் விதிவிலக்குகள் உள்ளன, எனவே அந்தச் சிறப்பு விதிவிலக்குகளுக்காகச் சட்டத்தின் பின்வரும் பிரிவுகளைப் படிக்கவும்.

5(1)(அ) தனிப்பட்ட தகவல்

5(1)(ஆ)(i) அத்தகைய தகவல் அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆள்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்குமிடத்து

5(1)(ஆ)(ii) வழங்கப்பட்ட அத்தகைய தகவல் ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேசச் சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்பாடுகள் அல்லது கடப்பாடுகளினால் இரகசியமாகத் தரப்பட்டிருக்குமாயின்

5(1)(இ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரதூரமான பங்கத்தை விளைவிக்குமிடத்து

5(1)(ஈ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கம், வியாபார இரகசியம் இல்லது புலமைச் சொத்து 5(1)(உ) ஆள் ஒருவர் தொடர்பான மருத்துவப் பதிவேடுகள் 5(1)(ஊ) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் அல்லது அவரின் கடமைகளைப் புரிகையில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உதவுகின்ற எவரேனும் அலுவலருக்கும் பகிரங்க அலுவலரொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடல் உட்பட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் வெளிவிடப்படுவதற்கு அனுமதிக்கப்படாத உயர்தொழிலர் ஒருவருக்கும் அத்தகைய உயர்தொழிலர் எப்பகிரங்க அதிகாரி ஒருவருக்கு சேவையை வழங்குகின்றாரோ அப்பகிரங்க அதிகாரியொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடலின் தகவல்

5(1)(எ) ஒரு நம்பக உறவு நிலைத்திருக்கும் காரணத்தால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப்படுமிடத்து

5(1)(ஏ)(i) அத்தகவல், ஏதேனும் குற்றத்தைத் தடுப்பதை அல்லது துப்புத் துலக்குவதை அல்லது தவறாளிகளைக் கைப்பற்றுவதை அல்லது அவருக்கெதிராக குற்றவழக்குத் தொடுப்பதை பாதகமாகப் பங்கப்படுத்தக்கூடியவிடத்து

5(1)(ஏ)(ii) அத்தகவல், சட்ட நடைமுறைப்படுத்துகை அல்லது தேசியப் பாதுகாப்பு தொடர்பான தகவலின் அந்தரங்க மூலகமொன்றின் அடையாளத்தை ஆய்ந்தறியப்படுவதற்கு வெளிக்காட்டுமிடத்து

5(1)(ஐ) அத்தகவல், மூன்றாம் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு அந்தரங்கமாக வழங்கப்பட்டிருக்குமிடத்து 5(1)(ஒ) தகவலின் வெளிவிடுகையானது நீதிமன்ற அவமதிப்பாக உள்ளவிடத்து அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளவிடத்து

5(1)(ஓ) தகவலின் வெளிவிடுகையானது பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து

5(1)(ஔ) தகவலானது பரீட்சையுடன் தொடர்புடையதாக உள்ளவிடத்து

5(1)(க) எந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தொடர்பாக முடிபொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையினதாக தகவலானது உள்ளவிடத்து

5(1)(ங) தகவலானது தேர்தலுடன் தொடர்புடையதாக உள்ளவிடத்து

ஆனால்,

5(2) - ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கோரப்பட்ட தகவல் பத்து ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாக இருப்பின், (அ), (ஆ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), மற்றும் (ஒ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் தவிர்ந்த, அதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்களுள் எதனதும் மீதும் தகவலுக்கான கோரிக்கை மறுக்கப்படுதலாகாது.

5(3) - ஏதேனும் கடல்கடந்த வியாபார உடன்படிக்கை தொடர்பிலான ஏதேனும் தகவலானது, பேரம் பேசுதல்கள் பத்தாண்டுகள் கழிந்த பின்னர்கூட முடிவடையாதிருக்குமிடத்து, வெளிவிடுதலாகாது

5(4)- ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தகவலுக்கான கோரிக்கையொன்று, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அறிக்கை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து மறுக்கப்படுதலாகாது.

5(5) - ஓராம் உட்பிரிவின் கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் தகவலைப்பெற அணுகுதலை அளிப்பதுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை தொடர்பில் தகவல் அலுவலர், ஆணைக்குழுவின் மதியுரையை நாடிப்பெறலாமென்பதுடன் ஆணைக்குழுவானது இயலுமானளவு விரைவானதாக பதினான்கு நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில் அதன் மதியுரையினை வழங்கலாம்.

தகவல் அலுவலரிடமிருந்து நிஷா தகவலைப் பெற்றுக்கொள்ளாதபோது அவர் என்ன செய்ய முடியும்?

என்னிடம் அதற்கான ஒரு தெரிவு உள்ளது.

அத்தெரிவு…….

## படிமுறை 4 - குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு செய்தல் பிரிவு - 31(1)

மறுப்பு, செயல் அல்லது எவ் ஏதுக்கள் மீது மேன்முறையீடு நடத்தப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் அறிய வந்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்



கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு காரணத்தால் மேல்முறையீட்டை நிஷா (மேல்முறையீட்டாளர்) தாக்கல் செய்ய முடியாவிட்டாலும், நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அந்தக் காரணத்தில் திருப்தி அடைந்தால், 14 நாட்களுக்குப் பிறகும் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(நிரப்பப்பட்ட RTI மேன்முறையீட்டுப் படிவத்தின் 7 ஆம் பக்கத்தை பார்க்கவும் )



குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து பதில் ஒன்றிற்காகக் காத்திருத்தல் - 3 வாரங்கள் பிரிவு - 31(3)

நிஷாவுக்குத் தகவல் கிடைத்ததும், அதை அவர் சமூகத்துடன் பகிர்ந்துகொள்வார்.



நிஷாவுக்குச் சாதகமாக முடிவு வழங்கப்படாத பட்சத்தில் பிரிவு 32(1) (அ) அல்லது

3 வாரங்களுக்குள் நிஷாவுக்குப் பதில் கிடைக்காத பட்சத்தில் பிரிவு - 32(1)(ஆ)

நிஷா பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்.



## படிமுறை 5 – RTI ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தல்
## பிரிவு - 32(1)



நிஷா மேல்முறையீடு செய்யக்கூடிய காலக்கெடு – படிமுறை 4 இல் நியமிக்கப்பட்ட அதிகாரி முடிவைத் தெரிவித்த 2 மாதங்களுக்குள் அல்லது மேல்முறையீட்டிற்குப் பதிலளிக்க ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடுவை மீறிய 2 மாதங்களுக்குள், அவர் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம்



நிஷாவுக்குத் தகவல் கிடைத்ததும், அதை அவர் சமூகத்துடன் பகிர்ந்துகொள்வார்.



நிஷா மேல்முறையீட்டுத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டால்



அப்படியென்றால், தகவல் பெற நான் என்ன செய்ய வேண்டும்?

அதற்கு எனக்கு ஒரு வழி இருக்கிறது. அந்த வழி...

கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு காரணத்தால் நிஷாவால் (மேல்முறையீட்டாளர்) மேல்முறையீடு செய்ய முடியாவிட்டாலும், அந்தக் காரணத்தில் தகவல் அறியும் உரிமை ஆணையம் திருப்தி அடைந்தால், 2 மாதங்களுக்குப் பிறகும் கூட மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படலாம். பிரிவு - 32(2).



(நிரப்பப்பட்ட RTI மேன்முறையீட்டுப் படிவத்தின் 8 ஆம் பக்கத்தை பார்க்கவும்

## படிமுறை 6 – மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு
## பிரிவு - 34(1)



(மேன்முறையீட்டுக் கட்டளை அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள்)

**RTI 01**

தகவலுக்கான கோரிக்கையை மேற்கொள்வதற்கு இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் ஒரு கட்டாயமான தேவைப்பாடு அல்ல என்பதையும் கோரப்பட்ட தகவல்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான தகவல்களுடன் ஏதேனும் எழுத்திலான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்மொழி மூலமான கோரிக்கை போதுமானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

## தகவலைப் பெறுவதற்கான விண்ணப்பம்

**தகவல் அலுவலர், பிரதேச செயலகம், கரைச்சி.**

01. கோரிக்கையாளரின் பெயர் – **நிஷா சுந்தரலிங்கம்**

02. முகவரி – **இல 00, பரந்தன், கிளிநொச்சி**

03. தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்): **071 0000000**

04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்): **kkkkk@gmail.com**

05. கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள் (போதிய இடம் காணப்படாவிடில் வேறு தாளில் இணைக்கவும்)

I. குறித்த பகிரங்க அதிகாரசபை – **கரைச்சி பிரதேச செயலகம்**

II. கோரப்படும் தகவல்கள் – **2021 ஆம் ஆண்டில், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் எத்தனை சமுர்த்திப் பயனாளர்கள் உள்ளனர் அத்துடன் சமுர்த்திப் பயனாளர்களின் பெயர் விபரங்களைக் கொண்ட பட்டியல் மற்றும் சமுர்த்தி கிடைக்கப்பெறாத பயனாளர்களின் பெயர் விபரங்களை கொண்ட பட்டியல்.**

III. தகவல் கோரப்படும் குறித்த காலப்பகுதி (பொருத்தமாயின்) - **2021**

06. தகவல் கோரப்படும் விதம் - **பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்**

i. சம்பந்தப்பட்ட வேலையை, ஆவணங்களை, பதிவுகளைப் பரிசோதித்தல்

ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்

iii. பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்

iv. அத்தகைய தகவல் ஒரு கணனியில் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின், தகவலைப் பெறுவது CD/DVD/ஊடக களஞ்சியம் / பதிவு நாடாக்கள் / வீடியோ கெசற்றுகள் / ஏதேனும் வேறு இலத்திரனியல் வடிவம் /அச்சுப் பிரதிகள்

07.வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி- **தமிழ்**

08. கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம்/இல்லை) ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக. - **இல்லை**

09. வேறு ஏதேனும் விபரங்கள் **-**

10. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)

I. …………………………….
II. …………………………….
III.…………………………….

11. கோரிக்கையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை) – **ஆம்**

திகதி: **08.09.2022**
ஒப்பம்: **நிஷா**

**குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கான மேன்முறையீடு**

**குறித்தளிக்கப்பட்ட அலுவலர்,**
**பிரதேச செயலகம்,**
**கரைச்சி.**

**மேன்முறையீட்டுப் படிவம்**

01. மேன்முறையீட்டாளரின் பெயர் – **நிஷா சுந்தரலிங்கம்**

02. முகவரி – **இல 00, பரந்தன், கிளிநொச்சி**

03. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்): **071 0000000**

04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்): **kkkkk@gmail.com**

05. தகவல் அலுவலரிடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியும் பதிவிலக்கமும்: **08.09.2022**

06. தகவல் அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் / இல்லை: **இல்லை**
(ஆம் எனில், தங்களிடம் ஒரு பிரதி இருப்பின் அதனை இணைக்கவும் இன்றேல், பதிலின் விபரங்களை வழங்கவும்)

07. மேன்முறையீட்டுக்கான அடிப்படை: **சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட கால வரையறைக்கு இணங்கி ஒழுகாமை தகவல் அலுவலர் பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவலை வழங்கியுள்ளார்**

I. தகவலுக்காக கோரிய விண்ணப்பத்தை தகவல் அலுவலர் மறுத்தல்
II. பிரிவு 5இன் கீழ் அத்தகைய தகவல் வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்னும் அடிப்படையில் தகவல் அலுவலர் தகவலை அணுகுவதற்கு மறுத்தல்.
III. சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட கால வரையறைக்கு இணங்கி ஒழுகாமை தகவல் அலுவலர் பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவலை வழங்கியுள்ளார்
IV. தகவல் அலுவலர் மேன்மிகையான கட்டணத்தை விதித்துள்ளார்
V. தகவல் அலுவலர் தகவலை கோரப்பட்ட வடிவத்தில் வழங்குவதற்கு மறுத்தல்
VI. கோரிக்கையாளர் தகவலை அணுகுவதைத் தவிர்ப்பதற்காக தகவல் உருக்குலைக்கப்பட்டுள்ளது, அழிவடையச் செய்யப்பட்டுள்ளது அல்லது தவறாக இடப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை தகவலைக் கோருபவர் கொண்டிருத்தல்
VII. 14 நாட்கள் முடிவடைந்து மேலதிக காலம் வேண்டுவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விபரங்கள்: **நான் கராச்சி பிரதேச செயலகத்தின் தகவல் அதிகாரியிடம் சில தகவல்களைக் கேட்டு ஒரு கோரிக்கை விடுத்தேன். ஆனால், 14 வேலை நாட்கள் ஆகியும் அந்தத் தகவல் அதிகாரியிடமிருந்து எனக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.**

08. கோரப்பட்ட தகவல் பற்றிய சுருக்கமான விபரம் **: 2021 ஆம் ஆண்டில் கராச்சி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் எத்தனை சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர் மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் பெயர் விவரப் பட்டியல் மற்றும் சமுர்த்தி பெறாத பயனாளிகளின் பெயர் விவரப் பட்டியல்.**

09. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு மேற்கொள்ளப்படாவிடின், தாமதித்திற்கான காரணம் [பிரிவு. 31(5)]

10. ஏதேனும் வேறு விபரங்கள்:

திகதி: **29.09.2022**
ஒப்பம்: **நிஷா**

« உள்ளடக்கத்திற்கு

**மேன்முறையீட்டின் வடிவம்**

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு**

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு,

**அறை இல. 203,**
**BMICH வளாகம்,**
**பௌத்தாலோக மாவத்தை,**
**கொழும்பு - 07**

மேன்முறையீட்டுப் படிவம்

1. மேன்முறையீடு செய்பவரின் பெயர்:-**நிஷா சுந்தரலிங்கம்**
2. முகவரி:-**இல 00, பரந்தன், கிளிநொச்சி**
3. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்):-**071 0000000**
4. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்):**kkkkk@gmail.com**
5. அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்):-

   **திரு. அ (சட்டத்தரணி)**
   **077 0000000**
6. சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபையின் பெயர்:-**கரைச்சி பிரதேச செயலகம்**
7. சம்பந்தப்பட்ட தகவல் அலுவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்):
   **தகவல் அலுவலர்,**
   பிரதேச செயலகம்,
   **கரைச்சி**
   **021 0000000**
8. தகவல் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்த திகதியும் பதிவிலக்கமும்:-...**08.09.2022**
   (கோரிக்கையின் நகலை இணைக்கவும்)
   **(பின்னிணைப்பு 01)**
9. தகவல் அலுவலரிடமிருந்து உங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் / இல்லை:-
   ..................**இல்லை**
   (ஆம் எனில், பதிலின் பிரதியை இணைக்கவும்)
10. தகவல் அலுவலரிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி:-**இல்லை**
11. எந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிராக மேன்முறையீடு மேற்கொள்ளப்படுகின்றதோ அவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:-
    **குறித்தளிக்கப்பட்ட அலுவலர்,**
    **பிரதேச செயலகம்,**
    **கரைச்சி.**
    **021 0000000**
12. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு மேற்கொண்ட திகதியும் மேன்முறையீட்டு இலக்கமும்:-**30.09.2022**
13. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் /இல்லை:-
    **இல்லை (பின்னிணைப்பு 02)**
    (ஆம் எனில் தீர்மானத்தின் ஒரு பிரதியை இணைக்கவும்)
14. குறித்தளிக்கப்பட்ட அதிகார சபையிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி: **இல்லை.**
15. மேன்முறையீட்டுக்கான அடிப்படை **நான் கராச்சி பிரதேச செயலகத்தின் தகவல் அலுவலர் மற்றும் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் தகவல் கேட்டு ஒரு கோரிக்கை விடுத்தேன். ஆனால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனக்கு இந்தத் தகவல் தேவை, தயவுசெய்து இந்த வேண்டுகோளைப் பரிசீலிக்கவும்.**
16. மேன்மிறையீட்டில் கோரப்பட்ட தகவல் (விபரங்கள், காலப்பகுதி மற்றும் விடயம்):-**2021 ஆம் ஆண்டில் கராச்சி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கிரு'ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் எத்தனை சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர் மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் பெயர் விவரப் பட்டியல் மற்றும் சமுர்த்தி பெறாத பயனாளிகளின் பெயர் விவரப் பட்டியல்.**
17. கோரப்பட்ட தீர்மானம்:-**இல்லை.**
18. மேன்முறையீடு குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படாவிடின், தாமதத்திற்கான காரணம் (பிரிவு 32(2)):-...**பொருத்தமற்றது**
19. இதே கருமம் தொடர்பாக ஆணைக்குழுவிடம் முன்னர் ஏதேனும் மேன்முறையீடு கோரப்பட்டதா?
    **இல்லை**
20. வேறு ஏதேனும் தகவல் (தகவலுக்கான கோரிக்கை ஒரு பிரசையின் வாழ்க்கை மற்றும் சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா என்பது உள்ளடங்களாக):-
21. இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல்
    **பின்னிணைப்பு 01 – தகவல் அலுவலருக்கான கோரிக்கை**
    **பின்னிணைப்பு 02 – குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கான கோரிக்கை**

திகதி: **30.12.2022**

ஒப்பம்:**நிஷா**

« உள்ளடக்கத்திற்கு

# மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்



வணக்கம் நிமால், மக்கள் போராட்டத்திற்கு (அரகலய) பின்னரான இந்த நான்கு ஆண்டுகளில் பல மனித உரிமை மீறல்கள் குறித்து நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் பற்றி நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா?



நான் அவை பற்றி ஓரளவிற்குக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் அவை பற்றிய ஒரு தெளிவான புரிதல் எனக்கு இல்லை. அவை இரண்டும் ஒரே விடயம் அல்லவா?



அவை தொடர்புடையவை, ஆனால் ஒரே விடயம் அல்ல. மனித உரிமைகள் என்பது மனிதர்கள் என்ற காரணத்தினால் உலகில் வாழும் ஒவ்வொரு ஆளுக்கும் உரித்தாகும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களாகும். இந்த உரிமைகள் உலகளாவியரீதியிலானவை, பாராதீனப்படுத்தப்பட முடியாதவை, அத்துடன் நாடொன்றின் சட்டங்களிலிருந்து சுயாதீனமானவை.



அப்படியாயின், அவை எல்லா இடங்களிலும் ஏற்புடையவையா?



ஆம், மனித உரிமைகள் உலகளாவியரீதியிலானவை. மனிதர்களாக இருப்பதிலிருந்து அவை உருவாகின்றன என்பதுடன்,

- ★ மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் (UDHR)
- ★ குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICCPR)
- ★ பொருளாதார, சமூக, மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICESCR)

போன்ற சர்வதேசச் சட்டங்கள் மற்றும் கருவிகளினாலும் அங்கீகரிக்கப்படுகின்றன.



அப்படியாயின், அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?

« உள்ளடக்கத்திற்கு



அடிப்படை உரிமைகள் என்பது இலங்கை அரசியலமைப்பில், குறிப்பாக 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் iii ஆம் அத்தியாயத்தில் (10 – 17 ஆம் உறுப்புரைகள்) குறிப்பாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளாகும்.



அவையும் மனித உரிமைகளும் ஒன்றா?



சில ஒரே மாதிரியானவை. ஆனால் பிரதான வித்தியாசம் என்னவெனில், இந்த அடிப்படை உரிமைகள் அனைத்து இலங்கையர்கள் மீதும், விசேடமாக அரசின் அனைத்து உறுப்புக்கள் மீதும் சட்டரீதியான பிணிப்பைக் கொண்டுள்ளன.



உங்களால் வித்தியாசங்களை விளக்க முடியுமா?



தொழில்நுட்ப விடயங்களைத் தவிர, உண்மையில் வித்தியாசம் எதுவுமில்லை. அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பொதுச் சர்வதேசச் சட்டம் ஆகியவற்றிற்கிடையே வித்தியாசமொன்று காணப்படுகின்றது.

| மனித உரிமைகள் | அடிப்படை உரிமைகள் |
|---|---|
| 1. உலகளாவியவை – எல்லா இடங்களிலும் ஏற்புடையவை (நீங்கள் மனிதராகப் பிறந்துள்ளமையால்) | இலங்கையினுள் மாத்திரம் ஏற்புடையவை (ஏனெனில் நீங்கள் இந்த நாட்டின் பிரசை அத்துடன் சில ஏற்பாடுகள் நாட்டின் பிரசையல்லாதோருக்கும் ஏற்புடையவையாகும் - உ.தா. – 13 ஆம் உறுப்புரை) |
| 2. சர்வதேச சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது | இலங்கை அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டது (சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் ஊடாக அடிப்படை உரிமைகள் அதிகளவில் பொருள்கோடல் செய்யப்பட்டு வருகின்றன. சர்வதேச மனித உரிமைகள் சட்டத் தராதரங்களின் மீது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பெருமளவில் தங்கியுள்ளது.) |
| 3. இலங்கை நீதிமன்றங்களில் எப்போதும் நேரடியாக அமுலாக்கப்பட முடியாது | நேரடியாக அமுலாக்க முடியும் - உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய முடியும் அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் (HRCSL) செல்ல முடியும் |
| 4. பரந்த நோக்கெல்லை | குறித்துரைக்கப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பட்டியல் |

உதாரணங்கள்:

## இலங்கையில் அடிப்படை உரிமைகள்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு (அத்தியாயம் III)**

10 ஆம் உறுப்புரை - சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மற்றும் மத சுதந்திரம்

11 ஆம் உறுப்புரை - சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம்

12 ஆம் உறுப்புரை - சமத்துவத்துக்கான உரிமை

13 ஆம் உறுப்புரை - ஏதேச்சையாகக் கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும் கடந்த காலத்தை உள்ளடக்கும் பயனுடையனவான தண்டனைச் சட்டவாக்கங்களைத் தடை செய்தலும்

14 ஆம் உறுப்புரை - பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், முயற்சி செய்வதற்கான சுதந்திரம், மற்றும் தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம்

14A ஆம் உறுப்புரை - தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை

## மனித உரிமைகள்

**மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம். (UDHR)**

1 ஆம் உறுப்புரை - மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகப் பிறக்கின்றனர் அத்துடன் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள்

2 ஆம் உறுப்புரை - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத் தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து என்பன போன்ற எத்தகைய ஓரங்காட்டலுமின்றி எல்லோருக்கும் உரிமைகள் ஏற்புடையதாகின்றன.

3 ஆம் உறுப்புரை - ஆளொருவரின் வாழ்விற்கான, சுதந்திரத்திற்கான மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை

4 ஆம் உறுப்புரை - எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றில் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்

5 ஆம் உறுப்புரை - சித்திரவதை, அல்லது கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது தரங்குறைந்த நடாத்துகை அல்லது தண்டனை இல்லாமை

6 ஆம் உறுப்புரை - சட்டத்தின் முன் ஆளொருவராக அங்கீகரிக்கப்படுவதற்கான உரிமை

**குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (ICCPR)**

1 ஆம் உறுப்புரை - அனைத்து மக்களும் சுய நிர்ணய உரிமையைக் கொண்டுள்ளனர்

2 ஆம் உறுப்புரை - ஓரங்காட்டுதலின்மை மற்றும் அரசு உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுடன் பயனுறுதி மிக்க பரிகாரங்களையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3 ஆம் உறுப்புரை - அனைத்துக் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளையும் அனுபவிப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகளை உறுதிப்படுத்தல்

6 ஆம் உறுப்புரை - வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமை

7 ஆம் உறுப்புரை - சித்திரவதையிலிருந்தான சுதந்திரம்

8 ஆம் உறுப்புரை - அடிமைத்தனத்திலிருந்தான சுதந்திரம்

**கபொருளாதார, சமூக, மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம். (ICESCR)**

6 ஆம் உறுப்புரை - தொழில் புரிவதற்கான உரிமை: சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்த அல்லது ஏற்றுக்கொண்ட தொழிலைப் புரிவதன் மூலம் வாழ்க்கை நடாத்துவதற்கான வாய்ப்பு

8 ஆம் உறுப்புரை - தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான மற்றும் அவற்றில் இணைவதற்கான உரிமை

9 ஆம் உறுப்புரை - சமூகக் காப்புறுதி உள்ளடங்கலாக சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை

11 ஆம் உறுப்புரை - போதிய உணவு, உடை, வீடமைப்பு உள்ளடங்கலான போதிய வாழ்க்கைத்தரத்திற்கும்' வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான மேம்பாட்டிற்குமான உரிமை

12 ஆம் உறுப்புரை - உடல் மற்றும் உள சுகாதாரம் தொடர்பில் அடையக்கூடிய அதியுச்ச தராதரங்களுக்கான உரிமை

13 ஆம் உறுப்புரை - உடல் மற்றும் உள சுகாதாரம் தொடர்பில் அடையக்கூடிய அதியுச்ச தராதரங்களுக்கான உரிமை

அப்படியாயின், எனது மனித உரிமைகள் எவ்வாறேனும் மீறப்பட்டால், நான் எப்போதும் நீதிமன்றத்தை நாட முடியுமா?



பொதுவாக, ஆம். ஆனால் எப்போதும் அல்ல. நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கைக்கு எதிராக மாத்திரம் அரசியலமைப்பு மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது - அனைத்துச் சட்டங்களும் எவ்வாறு பொருள்கோடல் செய்யப்பட்டுப் பிரயோகிக்கப்படுகின்றன என்பதன் மீது அடிப்படை உரிமைகள் தாக்கம் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆகவே, அடிப்படையாக, ஒவ்வொரு நீதிமன்ற வழக்கும் ஓர் அடிப்படை உரிமைகள் வழக்கு அல்ல.



**ஒருவர் எனது அடிப்படை உரிமைகளை மீறும் சந்தர்ப்பத்தில் என்ன நடக்கும்?**



நீங்கள் இலங்கை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய முடியும் (அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரை).

ஆயினும் நினைவில் வைத்திருங்கள்,

- ★ மீறுகை இடம்பெற்று 30 நாட்களினுள் அது தாக்கல் செய்யப்பட வேண்டும்.

முறைப்பாட்டை மேற்கொள்பவர் ஒருவர் முதலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில (HRCSL) முறைப்பாடு ஒன்றை மேற்கொள்வாராயின், ஒருமாத காலப்பகுதியைக் கணிப்பதில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னர் அத்தகைய விசாரணை முடிவுறாதிருக்கும் காலப்பகுதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுதலாகாது - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு

- ★ நிறைவேற்று அல்லது நிருவாக நடவடிக்கைக்கு எதிராக மாத்திரமே.

**மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு செய்வதற்கான இடமொன்று உள்ளதா?**





ஆம், அடிப்படை உரிமைகளாக நேரடியாக உள்ளடக்கப்படாத பிரச்சினைகள் உள்ளடங்கலான மனித உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) கையாளுகின்றது. நீங்கள் பல்வேறு வழிகளில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொள்ள முடியும்,

1. நேரடியாக – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏதேனும் பிராந்திய அலுவலகத்தில் வாய்மூல முறைப்பாடு ஒன்றினை அளித்தல்.

2. எழுத்து மூலமாக – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏதேனும் அலுவலகத்திற்குத் தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளித்தல

3. இணையவழியில் – மின்னஞ்சல் மூலமாக முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ளுதல் அவசர விடயமாயின் (உதா., - சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்படல்), நேரடியாகச் செல்லுதல் அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் துரித அழைப்பெண்ணைத் தொடர்புகொள்ளுதல் சிறந்தது.

# குடும்ப வன்முறையைத் தடுப்பது தொடர்பான சட்டம்



சந்துனி: பல்கலைக்கழக மாணவி

அனுஷா: சட்ட ஆலோசகர்

« உள்ளடக்கத்திற்கு



அனுஷா, இந்த நாட்களில் சமூக ஊடகங்களில் குடும்ப வன்முறை பற்றி அதிகமாக பேசப்படுகிறது. அது மிகவும் சாதாரணமாகி விட்டதுபோல் தெரிகிறது. இதைப் பற்றி நீங்கள் விளக்க முடியுமா?



**குடும்ப வன்முறை**

குடும்ப வன்முறை என்பது குடும்பம் ஒன்றில் பாதிக்கப்பட்டவருக்கும், பாதிப்பை ஏற்படுத்தியவருக்கும் இடையிலான தனிப்பட்ட உறவின் காரணமாக வீட்டினுள்ளோ அல்லது வெளிச்சூழலிலோ பாதிக்கப்பட்டவருக்கு புரியப்படும் உடல், உள ரீதியான பாதிப்பாகும். பெண்கள் மற்றும் சிறுவர்களே பெரும்பாலும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர். குடும்பவன்முறையானது மது, போதைப்பொருட்களின் பாவனை, பொருளாதார நெருக்கடி, பால்நிலை சமத்துவமின்மை, குடும்ப அதிகாரம், சமூகக்கொள்கைகள் போன்றவற்றால் பெரும்பாலும் இடம்பெறுகின்றது.



அப்படியானால், குடும்ப வன்முறை என்பது வெறும் உடல்ரீதியான தாக்குதல்களுக்குள் மட்டும் வரையறுக்கப்படுவதில்லை, அல்லவா?



மிகச் சிறந்த கேள்வி. இல்லை, அது அதைவிட மிகவும் விரிவான ஒரு கருத்தாகும். குடும்ப வன்முறையை பொதுவாக 04 முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம்.

**01. உடல் ரீதியான வன்முறை**
நபரொருவரின் உடலுக்கு காயமேற்படுத்தல், தாக்குதல், தள்ளுதல், அடித்தல், குத்துதல் போன்ற செயல்கள்

**02. உளரீதியான வன்முறை**
அச்சுறுத்தல், பயத்தினை ஏற்படுத்தல், விமர்சித்தல், மிரட்டுதல், மன அழுத்தத்தை உருவாக்கல் போன்றவை

**03. பொருளாதார வன்முறை**
தேவைக்கான பணத்தினை வழங்காதிருத்தல், அத்தியாவசிய தேவைக்கான பொருட்களை வழங்க மறுத்தல், சொத்துக்களில் கட்டுப்பாடு போன்றவை

**04. பாலியல் வன்முறை**
சம்மதமின்றிய பாலியல் செயற்பாடுகள், பாலியல் பலாத்காரம், பாலியல் சுரண்டல் போன்றவை



சகோதரி, நமது நாட்டில் குடும்ப வன்முறையைச் சட்டம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?



2005ம் ஆண்டு 34ம் இலக்க குடும்பவன்முறைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 23 ஆனது குடும்பவன்முறையை இரண்டாக வகைப்படுத்துகின்றது.

**01. உடல் ரீதியான துன்புறுத்தல்கள்**
- தண்டணைச்சட்டக்கோவையின் 16ம் அத்தியாயத்தின் கீழான குற்றங்கள் உதாரணம் - கொலை, பாலியல் வன்புணர்வு, கடுங்காயம் ஏற்படுத்தல், பாலியல் துஸ்பிரயோகம்
- மிரட்டுதல் (தண்டணைச்சட்டக்கோவையின் பிரிவு 372)
- குற்றமுறையான அச்சுறுத்தல் (தண்டணைச்சட்டக்கோவையின் பிரிவு 483)
- மேற்கூறிய குற்றங்களை செய்ய முயற்சித்தல்

**02. உளரீதியான துன்புறுத்தல்கள்**
- உதாரணம் - மனதைப் புண்படுத்தும் விதத்தில் வார்த்தைகளைப் பிரயோகித்தல்
- பிறரின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காது மன அழுத்தத்தை உருவாக்கல்



ஒருவர் குடும்ப வன்முறைக்கு உட்பட்டிருந்தால், அவர் முதலில் என்ன செய்ய வேண்டும்? அதன் பின்னர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், சகோதரி?



**குடும்பவன்முறை ஒன்று இடம்பெற்றால் செய்ய வேண்டிய விடயங்கள்**

- உடனடியாக வன்முறை இடம்பெற்ற இடத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுதல்
- மருத்துவ உதவியை நாடுதல்
  வன்முறையால் காயங்கள், வெட்டுக்கள் ஏற்பட்டால் உடனே அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். குறித்த மருத்துவ அறிக்கை பாதிக்கப்பட்டவரால் எதிர்காலத்தில் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைக்கு உறுதுணையாக இருக்கும்.

- பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தல்
  பாதிக்கப்பட்டவர் தனக்கு ஏற்பட்ட வன்முறை குறித்து வன்முறை இடம்பெற்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்வதுடன், குறித்த முறைப்பாடு பதிவு செய்தமையை உறுதிப்படுத்தும் முறைப்பாட்டுப் பிரதியினைத் தம்வசம் வைத்திருக்க வேண்டும். இதுவும் பாதிக்கப்பட்டவரால் எதிர்காலத்தில் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைக்கு உறுதுணையாக இருக்கும் என்பதுடன் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய உதவியாக இருக்கும். பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் பொலிஸ் நிலையங்களில் உள்ள Women and Children's Bureau ஐ தொடர்பு கொள்ளலாம்.



நாம் குடும்ப வன்முறை தொடர்பாக ஒரு வழக்கைத் தொடர விரும்பினால், அதன் செயல்முறை என்ன? மேலும், அந்த வழக்கைத் தாக்கல் செய்யும் அதிகாரம் உடையவர் யார்?



அதைப் பற்றி நான் விளக்குகிறேன்.

**இலங்கையில் குடும்பவன்முறை வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடைமுறைகள்**

குடும்பவன்முறை வழக்குகள் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**குடும்பவன்முறை வழக்கை யார் தாக்கல் செய்யப்படலாம்?**

1. பாதிக்கப்பட்டவர் தானாக
2. பாதிக்கப்பட்டவர் சார்பில் பொலிஸாரினால்
3. பாதிக்கப்பட்டவர் சிறுவராயின்
   i. அப்பிள்ளையின் பெற்றோர்/ பாதுகாவலரினால்
   ii. அப்பிள்ளை யாருடன் வசிக்கின்றாரோ, அந்நபரினால்
   iii. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட நபரினால்



அதேபோல், இவ்வாறான வழக்குகளை யாருக்கு எதிராகத் தாக்கல் செய்ய முடியும் என்பதையும் விளக்க முடியுமா?



இங்கு பல தரப்பினருக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும். அவர்கள் பின்வருமாறு, குடும்பவன்முறை வழக்கை யாருக்கெதிராகத் தாக்கல் செய்யலாம்?

1 பாதிக்கப்பட்ட நபரின் வாழ்க்கைத்துணை
2 முன்னால் வாழ்க்கைத்துணை
3 கூடிவாழும் துணை

பாதிக்கப்பட்டவரின்/அவரின் வாழ்க்கைத்துணையின்/முன்னால் வாழ்க்கைத்துணையின்/கூடிவாழும் துணையின் பிற உறவுமுறையானவர்கள்

1. பெற்றோர், பேரன், பேத்தி
2. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
3. சகோதரர்கள்
4. பெற்றோரின் சகோதரர்கள்
5. பெறாமக்கள்



குடும்ப வன்முறை தொடர்பான ஒரு வழக்கில், நமக்கு நீதிமன்றத்திலிருந்து எவ்வாறான நிவாரணங்களைப் பெற முடியும்?



பல்வேறு வகையான நிவாரணங்களைப் பெற முடியும்.

குடும்பவன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறக்கூடிய நிவாரணங்கள்

**1. இடைக்காலக் கட்டளை**

குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் விரைவானதும் உடனடியானதுமான பாதுகாப்பு நிவாரணம் ஒன்றினை விசாரனையின்றி பெற்றுக்கொள்ள உள்ள சட்ட ஏற்பாடே இடைக்கால பாதுகாப்பு கட்டளையாகும். நீதிமன்றம் ஒன்றினால் பாதுகாப்புக் கட்டளையொன்று வழங்கப்படும் வரை குடும்பவன்முறையை உடனடியாகத் தடுக்க நீதிமன்றம் வழங்கும் தற்காலிக கட்டளையே இதுவாகும்.

குடும்பவன்முறையால் பாதிக்கப்பட்டவர் நீதவான் நீதிமன்றத்தில் மனு மற்றும் சத்தியக்கூற்று மூலம் விண்ணப்பம் ஒன்றைச் செய்யும் போது, குறித்த விண்ணப்பத்தின் மீது நீதிமன்று திருப்தியடைந்து குறித்த பாதிக்கப்பட்டவர் மேலும் குடும்பவன்முறையால் பாதிக்கப்பட கூடும் என திருப்தியடைந்தால் இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கமுடியும்.

இவ்வேற்பாடு நீதிமன்ற நடவடிக்கைகள் விசாரணைகளில் ஏற்படும் காலதாமதங்களை நீக்கி குடும்பவன்முறையால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றினை நாடுகின்ற போதே பாதுகாப்பு கட்டளை ஒன்றினை பெற்றுக்கொள்ள வழிவகை செய்கின்றது.

பாதிக்கப்பட்டவரினால் நீதிமன்றத்திற்குச் செய்யப்படுகின்ற விண்ணப்பத்தின் அடிப்படையில் விசாரணையொன்றை நடாத்துவதற்காக, விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பொருத்தமான திகதியொன்றை நிர்ணயிக்க வேண்டும். இவ் இடைக்காலக் கட்டளையானது பாதுகாப்புக் கட்டளையொன்று ஆக்கப்படும் வரை அல்லது நீதிமன்றினால் குறித்த இடைக்கால கட்டளை இரத்துச் செய்யப்படும் வரை வலுவிலிருக்கும்.

**2. பாதுகாப்புக்கட்டளை**

**பாதுகாப்புக் கட்டளையானது 3 வழிகளில் வழங்கப்படலாம்.**

1. இருதரப்பும் ஏற்றுக்கொண்டால் குற்றத்தினை ஏற்றுக்கொள்ளவோ நிருபித்தலோ அவசியம் இன்றி பாதுகாப்பு கட்டளையினை நீதிமன்று வழங்கலாம்.

2. வன்முறையைப் புரிந்தவர் நீதிமன்றிற்கு வருகை தராதபோது நீதிமன்று எதிர்வாதிக்கு அறிவித்தல் முறையாக சேர்ப்பிக்கப்பட்டுள்ளது என திருப்தியடைந்தால் எதிர்தரப்பின் விசாரனையோ சம்மதமோ இன்றி பாதிக்கப்பட்டவரின் சத்தியக்கூற்று

3. வன்முறையைப் புரிந்தவரும் குறித்த வன்முறையால் பாதிக்கப்பட்டவரும் நீதிமன்றிற்கு வருகை தந்திருந்தால் இரு தரப்பும் விசாரணை செய்யப்பட்டு சாட்சியங்கள், ஆவணங்கள் பரசீலிக்கப்பட்டு வன்முறையொன்று ஏற்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்தியடைந்தால் பாதுகாப்புக் கட்டளையை ஆக்கலாம்.

அவ்வாறு வழங்கப்படும் பாதுகாப்புக் கட்டளையானது 01 வருடத்திற்கு வலுவிலிருக்கும்.

**பாதுகாப்புக் கட்டளையின் மூலம் வன்முறையைப் புரிந்தவர் பின்வரும் செயல்களைச் செய்வதில் இருந்து தடுக்கப்படுவார்.**

1. பாதிக்கப்பட்டவரின் வதிவிடத்திற்கு/வதிவிடத்தின் ஒருபகுதிக்கு, வேலைத்தளத்திற்கு, பாடசாலைக்கு அல்லது அவர் தற்காலிகமாக தங்கியுள்ள இடத்திற்கு செல்தல்

2. பாதிக்கப்பட்டவரின் பிள்ளைகளைப் பார்வையிடுதல்.

3. பாதிக்கப்பட்டவரை தொடர்பு கொள்தல் அல்லது தொடர்பு கொள்ள முயற்சித்தல்

4. பாதிக்கப்பட்டவரின் நண்பர்கள், உறவினர்கள், சக வேலையாட்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்தல்

5. திருமண இல்லத்தினை விற்றல் அல்லது கைமாற்றல்

6. பாதிக்கப்பட்டவரிற்கு தொல்லை ஏற்படுத்தல்

**துணைக் கட்டளைகள்**

நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர் சார்பில் நிரந்தர பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்கிய பின், குடும்பவன்முறைத் தடுப்புச்சட்டத்தின் பிரிவு 12 இன்கீழ் பாதிக்கப்பட்ட நபரின் உடனடி பாதுகாப்பு, உடல்நலன் என்பவற்றைக் கருத்தல் கொண்டு துணைக்கட்டளைகளை வழங்கலாம்.

1. பிரதிவாதியிடம் உள்ள ஆயுதங்களை பொலிசார் கைப்பற்றுவதற்கான கட்டளை

2. பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரின் பிள்ளைகளின் தனிப்பட்ட பொருட்களை எடுக்க பொலிசார் உதவி செய்யலாம்.

3. தரப்பினரை கட்டாய உளவள ஆலோசனை மற்றும் புனர்வாழ்வுச் சிகிச்சைக்குச் செல்ல பரிந்துரைத்தல்.

4. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தற்காலிக தங்குமிடங்களை வழங்கல்

5. பாதுகாப்புக் கட்டளை பின்பற்றப்படுகின்றதா? என்பதை கண்காணிப்பதற்காக/மேற்பார்வை செய்வதற்காக குடும்ப நல உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரை நியமித்தல்.

6. பாதிக்கப்பட்டவருக்கு பிரதிவாதியை அவசர பண உதவிகளைச் செய்யச் செய்தல்.

7. பாதிக்கப்பட்டவர் வீட்டில் வாழ்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் செலவுகளை பிரதிவாதியை வழங்கச் செய்தல்.

நீதிமன்றத்தினால் குடும்பவன்முறை வழக்கொன்றில் வழங்கப்பட்ட இடைக்காலக் கட்டளை/ பாதுகாப்புக்கட்டளையை மீறினால் வழங்கப்படும் தண்டனைகள்

- ரூபா 10,000 வரை அபராதம் வழங்கப்படலாம். அல்லது
- 01 வருடம் வரையான சிறைத்தண்டனை வழங்கப்படலாம். அல்லது
- இரண்டுமே வழங்கப்படலாம்.



சகோதரி, பாதுகாப்பு இல்லங்கள் என்றால் என்ன, அவை எங்கே அமைந்துள்ளன, அவற்றின் மூலம் இவ்வாறான பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் ஆதரவுகள் என்ன?

பாதுகாப்பு இல்லம்

பாதுகாப்பு இல்லம் என்பது குடும்ப வன்முறை, பாலியல் ரீதியான குற்றங்கள், அச்சுறுத்தல் அல்லது கடும் ஆபத்திற்கு உள்ளான பெண்கள், சிறுவர்களை தற்காலிகமாக பாதுகாப்பாக தங்க வைக்கும் இரகசியமான இடமாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காக பாதுகாப்பு இல்லம் அமைந்துள்ள முகவரி பொதுவாக வெளியிடப்படுவதில்லை. வடமாகாணத்தில் ஒரே ஒரு பாதுகாப்பு இல்லமே இயங்கி வருகின்றது. வடமாகாணத்தில் இயங்கும் பாதுகாப்பு இல்லத்தை பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் யாழ் சமூக செயற்பாட்டு மையமும் (JSAC) இணைந்து நடாத்தி வருகின்றது.

பாதுகாப்பு இல்லத்தினை அணுகும் முறைகள்

- நீதிமன்ற கட்டளையின் ஊடாக
- பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO) இன் வேண்டுகோளின் படி
- தேவை நாடும் மகளீர் அமைப்பின் வேண்டுகோளின்படி
- பொலிஸ் முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரினால்
- அரச வைத்தியசாலைகளினால்



பாதுகாப்பு இல்லத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள்

- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடிப் பாதுகாப்பினை வழங்கல்
- உளநல, சமூக மற்றும் சட்ட ஆதரவைப் பெற உதவுதல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் என்பவற்றை வழங்கல்
- நீதிமன்றம், வைத்தியசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்கல்

பாதுகாப்பு இல்லத்தில் தங்கக்கூடிய அதிகூடிய காலம் 06 மாதங்கள் எனினும் நீதிமன்ற கட்டளைகள் மற்றும் **Case Conference** மூலமான தீர்மானத்தின் மூலம் தங்கும் காலமானது நீடிக்கப்படலாம்.

வடமாகாணத்தில் இயங்கும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் அமைப்புக்கள்

**அரச சார்புடைய நிறுவனங்கள்**
சட்ட உதவி ஆணைக்குழு, பொலிஸ் அதிகாரிகள், **Judicial Medical Officer - JMO**, அரச உளவள ஆற்றுப்படுத்துனர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்

**அரசசார்பற்ற நிறுவனங்கள்**
தேவை நாடும் மகளீர் அமைப்பு (WIN), யாழ் சமூக செயற்பாட்டு மையம்

**உளவியல் மற்றும் உள-சமூக ஆதரவு பெறும் வழிகள்**

**சுகாதாரம்**
வைத்தியசாலைகள் - வைத்தியர்கள் (JMO), உளவள ஆற்றுப்படுத்துனர்கள், புனர்வாழ்வு மையங்கள், (மிதுருபியச)/ நட்பு நிலையம்,

**சமூகம்**
பிரதேச செயலகம் - சிறுவர், பெண்கள் பிரிவு (WDO, உளவள ஆற்றுப்படுத்துனர்கள், **National Child Protection Authority - NCPA, Child Right Promotion Officer - CRPO, NGOs** (உதாரணம் - தேவை நாடும் மகளீர், யாழ் சமூக செயற்பாட்டு மையம்)

**சட்டம்**
சட்ட உதவி ஆணைக்குழு, பொலிஸ் அதிகாரிகள், மத்தியஸ்தர் சபை, தேவை நாடும் மகளீர்



இவ்வாறான விஷயங்களைப் பற்றி பேசுவதும் மிகுந்த தைரியம் தான். இவை குறித்து மக்கள் விழிப்புணர்வு பெறுவது மிகவும் முக்கியமல்லவா, சகோதரி?

ஆம், நிச்சயமாக. மௌனமாக இருப்பது எந்த விதத்திலும் தீர்வாகாது. பேசுவதும் உதவி கேட்பதும் தான் முதல் படியாகும்



# அரச காணிகள் தொடர்பிலான உங்களது உரிமைகள்

பிரஜைகளுக்கான வழிகாட்டிகள்





**அரச காணிகள் என்றால் என்ன? அவற்றின் உண்மையான உரிமையாளர் யார்?**



இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 80% இற்கும் அதிகமானவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. அரச காணிகள் தொடர்பான சட்டத்தின்படி, அனைத்து தரிசு நிலங்கள், காடுகள், குடியேறாத அல்லது பயிர் செய்யப்படாத நிலங்கள், அதற்கு முரணான விடயம் நிரூபிக்கப்படும் வரை அரசாங்கத்திற்கே சொந்தமானதென முன்எடுகோள் உள்ளது.
(அரச காணிகளில் அத்துமீறி நுழைதல் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 7ஆம் பிரிவு).
இலங்கையிலுள்ள சட்டத்தின்படி, அரச காணிகளின் முழுமையான உரிமை **இலங்கை அரசாங்கத்திற்கே** உரியது. அரசாங்கம் இந்த நிலங்களை **பொதுமக்களின் சார்பில்** நிர்வகிக்கின்றது. தொழில்நுட்ப ரீதியாக அரச காணிகளின் உரிமையை பிறருக்கு மாற்றுவதற்கான அல்லது கையளிப்பதற்கான இறுதி அதிகாரம் **ஜனாதிபதியிடமே** உள்ளது.
(13வது திருத்தத்தின் 2வது அத்தியாயம்)
நடைமுறையில், இச்செயற்பாடுகள் காணி ஆணையாளர் ஊடாக மாவட்டச் செயலாளர்கள் (அரசாங்க அதிபர்) மற்றும் பிரதேசச் செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

« உள்ளடக்கத்திற்கு



அரச காணியொன்றில் நீண்ட காலம் வசிப்பதன் மூலம் அதன் உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியுமா? (ஆட்சியுரிமை)



அவ்வாறு பெற்றுக்கொள்ள முடியாது.

அரச காணிகள் தொடர்பாக ஆட்சியுரிமையை (Prescriptive Title) கோர முடியாது. ஒரு தனியார் காணியில் 10 ஆண்டுகள் தொடர்ச்சியாகவும் தடையின்றியும் வசிப்பதன் மூலம் அதன் உரிமையைக் கோர முடியும் என்றாலும், அது அரச காணிகளுக்குப் பொருந்தாது. ( அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 103வது பிரிவு மற்றும் ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் பிரிவு). காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கேனும் அந்த காணிக்கு ஆட்சியுரிமையைக் கோர முடியாது ( 161ஆம் பிரிவு) அதேபோன்று, அரசாங்க ஒதுக்கீட்டு நிலங்களில் சட்டவிரோதமாக குடியேறி மேற்கொள்கின்ற அபிவிருத்திகளுக்காக இழப்பீட்டையேனும் கோர முடியாது. (அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 52 மற்றும் 53ஆம் பிரிவுகள்.



மாகாண சபைகளுக்கு அரச காணிகளின் உரிமையை பிறருக்கு மாற்ற முடியுமா?

உச்ச நீதிமன்றத்திற்கு அமைய, அரசாங்கம் இக்காணிகளை பொதுமக்களின் சார்பிலேயே நிர்வகிக்கின்றது. அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழ் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தாலும், அரச காணிகளின் உரிமையை பிறருக்கு மாற்றுவதற்கான அல்லது கையளிப்பதற்கான இறுதி அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது (13வது திருத்தம்)



அரச காணிகளைப் பகிர்ந்தளிப்பதைக் கட்டுப்படுத்தும் பிரதான சட்டங்கள் யாவை?



இலங்கையில் அரச காணிகளைப் பிரஜைகளுக்குப் பகரிந்தளிப்பதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் பிரதான நான்கு சட்டங்கள் பயன்படுத்தப்படுகினறன.

I காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (**Land Development Ordinance No.15 of 1935**) (அத்தியாயம் 464(1)[1] இது அரச காணிகளை முறைப்படி அபிவிருத்தி செய்து பகிர்ந்தளிப்பதற்கான முதன்மைச் சட்டமாகும்.

II அரச காணிகள் கட்டளைச் சட்டம் (**State Lands Ordinance No. 8 of 1947**) (அத்தியாயம் 454)[2] (1) காணி வழங்கல், குத்தகைக்கு வழங்கல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான பொதுவான சட்டக் கட்டமைப்பை

---

[1](இது 1946 ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கட்டளைச் சட்டம், 1973ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க சட்டம், மற்றும் 1953ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, 1955ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, 1969 இன் 16ஆம் இலக்க, 1971ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, 1981ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, 1983ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, 1993ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, 1995ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, 1996ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க மற்றும் 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டங்களின் கீழ் திருத்தப்பட்டுள்ளது)

வழங்குவதற்கான பொதுவான சட்டக் கட்டமைப்பை இது வழங்குகிறது.

**III.** காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள் ) சட்டம் **(Land Grants (Special Provisions) Act No. 43 of 1979)** காணியற்றவர்களுக்கு நேரடியாகக் காணிகளை வழங்குவதற்கு இச்சட்டம் ஏற்பாடுகளை வழங்குகின்றது.

**IV.** காணி மறுசீரமைப்புச் சட்டம் **(Land Reform Law No. 1 of 1972)**[3] இச்சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.



அரச காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பொதுவான மற்றும் விசேட தகுதிகள் யாவை?

ஒவ்வொரு சட்டத்தின் கீழும் காணியைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகுதியாக இலங்கைப் பிரஜையாக இருத்தல் கட்டாயமானதாகக் காணப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து பின்வரும் ஒவ்வொரு சட்டத்தின் கீழும் கீழ்க்காணும் தகுதிகள் கருத்தில் கொள்ளப்படும்.

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (Land Development Ordinance - LDO)

இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை வழங்குவதற்கான தகுதிகள், 1981ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட கட்டளைகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- பிரஜாவுரிமை – விண்ணப்பதாரர் கட்டாயமாக இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- தெரிவு முறை - காணிகளை வழங்குவதற்காக நடத்தப்படும் காணி கச்சேரியொன்றில் பங்கேற்று, அங்கிருந்து தகுதியானவராகத் தெரிவு செய்யப்படுவது அவசியமாகும்.
- முன்னுரிமை வகைப்படுத்தல் (1981 கட்டளை 3)
    - **விவசாயிகள் (Peasants):** காணிகளைப் பயிரிடுவதற்கு விருப்பமும் திறமையும் கொண்ட, தனது மற்றும் தனது குடும்பத்தின் வாழ்வாரத்திற்காக காணியிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தங்கியிருக்கும் நபர்கள்
    - **கல்வி கற்ற இளைஞர்கள்** (Educated Youth)18 வயதுக்கு குறையாத மற்றும் 25 வயதுக்கு மேற்படாத, விவசாயத்தில் ஆர்வமும் திறமையும் கொண்ட, ஆகக் குறைந்தது 8ஆம் தரம் வரை கல்வி கற்ற வேலையற்ற இளைஞர்கள்
    - **குறைந்த வருமானம் பெறுவோர்** - வருடாந்த வருமானம் 15,000 ரூபாவை விஞ்சாத நபர்கள்.
    - **அதிக வருமானம் பெறுவோர்** - வருடாந்த வருமானம் 15,000 ரூபாவிற்கும் 25,000 ரூபாவிற்கும் இடையில் (திருமணம் ஆகாதவராக இருக்கும் பட்சத்தில்) அல்லது 15,000 ரூபாவிற்கும் 45,000 ரூபாவிற்கும் இடையில் (திருமணமானவராக இருக்கும் பட்சத்தில்) பெற்றுக்கொள்ளும் நபர்கள்.

---

[2] (Ordinance N0.9 of 1947, Act Nos. 13 of 1949, 40 of 1978 and 10 of 1983 ஆகிய சட்டங்களின் கீழ் திருத்தப்பட்டுள்ளன.

[3] (39 of 1975, 14 of 1981, 39 of 1981, 12 of 1983, 14 of 1986, 18 of 1986 ஆகிய சட்டங்களின் கீழ் திருத்தப்பட்டுள்ளன.

## அரச காணிகள் கட்டளைச் சட்டம் (State Lands Ordinance - SLO)

இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை வழங்குவது மிகவும் பொதுவான தன்மையைக் கொண்டுள்ளதுடன், அரசாங்கத்தின் விசேட விருப்பத்திற்கமைய இடம்பெறுகின்றது.

- விருப்பதிகாரம் - காணிகளை வழங்குவதற்கு, குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான முழுமையான அதிகாரம் ஜனாதிபதியிடம் (அல்லது அவர் சார்பாக அமைச்சரிடம்) காணப்படுகின்றது.
- விசேட நோக்கங்கள் - கல்விசார், மதம்சார், தொண்டு அல்லது பொது நலன் சார்ந்த விசேட கருத்திட்டங்களுக்காகக் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள்
- நிறுவனரீதியான தேவைகள் - அரசாங்க திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது நியதிச்சட்ட சபைகளுக்கு தேவையான காணிகளும் இச்சட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## காணி வழங்கல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (Land Grants (Special Provisions) Act)

இச்சட்டம் முக்கியமாக காணியற்ற ஏழை மக்கள் மீதே கவனம் செலுத்துகின்றது.

- காணியற்றவராக இருத்தல் (Landless) - தமக்கோ அல்லது தமது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கோ வசிப்பதற்கு அல்லது பயிர் செய்வதற்கு போதுமான காணி இல்லாமையே பிரதான தகைமையாகக் கொள்ளப்படுகின்றது.

## காணி மறுசீரமைப்பு சட்டம் (Land Reform Law)

இச்சட்டத்தின் கீழ் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

- இலக்கு குழுக்கள் - காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளை, காணியற்ற விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு (சுவீகரிக்கப்பட்ட காணிகளில் பணியாற்றிய தோட்டத் தொழிலாளர்கள் அல்லது அப்பிதேசத்திலுள்ள காணியற்ற விவசாயிகள் - பிரிவு 18(அ)(1) பகிர்ந்தளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.
- மாற்றுவதற்கான தகுதிகள் - காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளுக்காக அனுமதிப்பத்திரம் அல்லது அளிப்பு பத்திரமொன்றைக் கொண்டுள்ள நபரொருவர், திருத்தப்பட்ட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரதாரராக அல்லது அளிப்புப்பத்திரதாரராக சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுவார்.
- அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் (சட்டத்தின் பிரிவு 23 (ஆ)

**மேற்குறிப்பிட்ட நான்கு சட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டம்** (1979ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கம்), **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்** (1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கம்) மற்றும் **நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்** (1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்கம்) ஆகிய சட்டங்களின் மூலமாகவும் அரசு காணிகள பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

## காணி கச்சேரி என்றால் என்ன? அது எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது?

காணி கச்சேரி என்பது அரச காணிகளைப் பிரஜைகளுக்குப் பகிர்ந்தளிக்கும்போது (உரித்தினை பிறருக்கு மாற்றுதல்) அக்காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியான நபர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் ஒரு உத்தியோகபூர்வ கூட்டமாகும். காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 2வது பிரிவு). அரச காணிகள் தன்னிச்சையான முறையிலன்றி, வெளிப்படையான மற்றும் நியாயமான நடைமுறையின் கீழ் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## இது எவ்வாறு செயற்படுகின்றது? (நடைமுறைச் செயன்முறை)

1. பகிரங்க அறிவித்தல் - காணி கச்சேரி நடத்தப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு பத்திரிகைகள், வர்த்தமானி மற்றும் அப்பிரதேசத்தின் பொது இடங்கள் (பிரதேச செயலகம், கிராம உத்தியோகத்தர் அலுவலகம்) ஆகியவற்றில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படும் (LDO 21ஆம் பிரிவு, 5வது ஒழுங்குவிதி)

2. விண்ணப்பங்களைக் கோரலும் தகுதிகளும் - காணியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தகுதியுள்ள பிரஜைகள், குறிப்பிட்ட படிவத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. நபர்களைத் தெரிவு செய்தலும் முன்னுரிமையும் - காணிக் கச்சேரியில் அரசாங்க அதிபர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட பிரதேச செயலாளர், விண்ணப்பதாரிகளை நேர்காணலுக்கு உட்படுத்தி, தகுதியானவர்களை தெரிவு செய்வார். (84வது கட்டளை). இதன்போது பின்வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விவசாயிகள்: விவசாயம் செய்வதற்கு இயலுமையுடையவர்களாகவும் காணியற்றவர்களாவும் இருப்போர் (3(அ) கட்டளை). கற்ற இளைஞர்கள்: 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட வேலையற்ற இளைஞர்கள் (3(ஆ)கட்டளை). குறைந்த வருமானம் பெறுவோர்: வருடாந்த வருமானம் 15,000 ரூபாவிற்கு குறைந்தவர்கள் (3(இ) கட்டளை)

4. முடிவுகளை வெளியிடுதலும் மேன்முறையீடு செய்தலும்: தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் பின்னர் பகிரங்கப்படுத்தப்படும். (5(4) வது ஒழுங்குவிதி). காணிக் கச்சேரியில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு யாரேனுமொவர் இணங்காத பட்சத்தில், இத்தீர்மானம் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் காணி ஆணையாளருக்கு எழுத்துமூல மேன்முறையீட்டை முன்வைக்க முடியும். (23(3)வது பிரிவு, 6வது ஒழுங்குவிதி)

## அனுமதிப் பத்திரங்கள் (Permits) மற்றும் அளிப்புப் பத்திரங்கள் (Grants) எவ்வாறு வழங்கப்படுகின்றன?

இலங்கைப் பிரஜைகளுக்கு அரச காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் (Permits) மற்றும் அளிப்புப் பத்திரங்கள் (Grants) வழங்கப்படும் விதம் குறித்து பின்வருமாறு இலகுவான முறையில் விளக்கமளிக்கலாம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (Land Development Ordinance - LDO)

இச்சட்டத்தின் கீழ் சாதாரண பொதுமக்களுக்கு இரண்டு கட்டங்களைக் கொண்ட செயன்முறையின் ஊடாக காணிகள் வழங்கப்படுகின்றன.

- **காணி கச்சேரி மற்றும் நபர்களைத் தெரிவு செய்தல்** - காணிகளை வழங்குவதற்கு முன்னர் தகுதியான நபர்களைத் தெரிவு செய்தவதற்காக பகிரங்கமாக நடத்தப்படும் ஒரு காணி கச்சேரி நடத்தப்பட வேண்டும் (20ஆம் பிரிவு)

- **அனுமதிப்பத்திரம் (Permit)** தெரிவு செய்யப்பட்ட நபர் அக்காணியில் குடியேறுவதற்கு அல்லது அதனை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர், அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படும் (பிரிவு 19 (1). இது பொதுவாக 'இ' (Form C) படிவத்தின் மூலம் முன்னெடுக்கப்படும். (7வது கட்டளை) இதன்போது அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட தவணைப் பணத்தை செலுத்துதல் வேண்டும் (பிரிவு 19(3))

- **அளிப்புப் பத்திரம் (Grant)** (அனுமதிப்பத்திரத்தின் கீழ் பெற்றுக்கொண்ட காணி முறையாக அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர், குடியிருப்புக்காக எனின், 1 வருடமும், நீர்ப்பாசன வசதியுடனான விவசாயக் காணியெனில் 3 வருடங்களும் கடந்த பின்னர் நிரந்தர அளிப்புப் பத்திரத்தைப் பெறுவதற்கான உரிமை கிடைக்கும் (பிரிவு 19 (4) இந்த நிரந்தர அளிப்புப் பத்திரம் 'ஓ' (Form K) மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டு (32 வது கட்டளை) காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் (29வது பிரிவு)

## அரச காணிக் கட்டளைச் சட்டம் (State Lands Ordinance - SLO)

இச்சட்டத்தின் கீழ் மிகவும் பொதுவான மற்றும் விசேட தேவைகளுக்காக (உதாரணமாக – மதம் அல்லது பொதுநலன்) காணிகள் வழங்கப்படுகின்றன.

- **உரிமையை பிறருக்கு மாற்றுவதற்கான அதிகாரம் - அரசாங்கத்தின் எந்தவொரு காணியையும் வழங்குவதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு** (Lease) அல்லது குடியிருப்பிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் ஜனாதிபதிக்கு முழுமையாக அதிகாரம் உள்ளது. (2வது பிரிவு)

- **விசேட அளிப்புகள்** - கல்விசார்ந்த, மதம்சார்ந்த அல்லது தொண்டு நோக்கங்களுக்காக விசேட நிபந்தனைகளின் கீழ் காணிகள் வழங்கப்படுகின்றன (6 வது பிரிவு) இத்தகைய விசேட அளிப்புகள் (மாதிரிப் படிவம் "அ" இற்கு அமைய எழுத்துமூலமாக இருத்தல் வேண்டும் (3வது ஒழுங்குவிதி)

- **பதிவு செய்தல்** - இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து அளிப்புப் பத்திரங்கள் அல்லது குத்தகைப் பத்திரங்கள் சட்டபூர்வமானதாக அமைவதற்கு அவை கட்டாயமாக பதிவு செய்யப்படுதல் வேண்டும் (26வது பிரிவு)

## காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (Land Grants (Special Provisions) Act)

காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை, தகுதியுள்ள காணியற்ற நபர்களுக்கு நிரந்தர உரிமையாக வழங்குவதற்கு இச்சட்டம் விசேட சலுகைகளை வழங்குகின்றது.

- **சட்டரீதியான வழங்கல்கள்** - காணியற்ற ஒருவருக்கு அரச காணியொன்றை நிரந்தரமாக வழங்கும்போது ஜனாதிபதியின் கையொப்பத்துடனான விசேட அளிப்புப் பத்திரமொன்றை வழங்குவதற்கு இச்சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன. (159வது பிரிவு)

- **உறுதிப்படுத்தும் நடைமுறை** - இங்கு காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (ஓ) மாதிரிப் வடிவத்தைப் பயன்படுத்தியே அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. காணி வெற்றிகரமாக கையளிக்கப்பட்ட பின்னர் அந்தப் பிரஜைக்கு அக்காணி தொடர்பான முழுமையான உரிமை கிடைக்கின்றது. (14(2) வது பிரிவு)

சாதாரண ஒரு பிரஜை அரச காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை வழிமுறை – **காணிக் கச்சேரியொன்றில்** பங்குபற்றி முதலில் அனுமதிப்பத்திரமொன்றைக் பெற்றுக்கொள்தவாகும். பின்னர் அக்காணியை அபிவிருத்தி செய்து, நிர்ணயிக்கப்பட்ட தவணைப் பணத்தைச் செலுத்தி முடித்ததும், மேற்கூறிய ஏதேனுமொரு சட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் **நிரந்தர அளிப்புப் பத்திரத்தை** (Grant) பெற்றுக்கொள்ள முடியும். எந்தவொரு அளிப்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரும், உங்களது உரிமையைப் பாதுகாப்பதற்கு அதனை பதிவாளர் அலவலகத்தில் பதிவு செய்வது அத்தியவசியமாகும்.

## காணி மறுசீரமைப்பு சட்டம்

காணி மறுசீரமைப்பு சட்டத்தின் பிரகாரம், உரிமையை பிறருக்கு மாற்றுதல் (Alienation) என்பது காணியொன்றின் உரிமையை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், பரிமாற்றம் செய்தல் அல்லது வழங்குதல் என்பவற்றைக் குறிக்கும் (சட்டத்தின் 66வது பிரிவு). இங்கு அனுமதிப்பத்திரம் என்பது குறிப்பிட்ட ஒரு காணியில் குடியேறுவதற்கு அல்லது பயிர் செய்வதற்கு ஆணைக்குழுவினால் வழங்கப்படுமொரு தற்காலிக உரிமமாகும். (2024/03 சுற்றறிக்கையின் 4வது பொருள்கோடல்) அளிப்புப் பத்திரம் அல்லது விற்பனை உறுதிப்பத்திரம் (22(1) (ஆ) மூலம் அக்காணியின் நிரந்தர உரிமை கையளிக்கப்படும்.

ஒவ்வொரு சட்டத்தின் கீழும் உரிமை வழங்கப்படும் விதம் பின்வருமாறாகும்.

| சட்டம் | அனுமதிப்பத்திரங்கள் (Permits) | அளிப்புப் பத்திரங்கள் (Grants) நிரந்தர உரிமை |
|---|---|---|
| **காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்** | முதலில் குடியேற்றத்திற்காக/ பயிர்ச்செய்கைக்காக தற்காலிக அனுமதி வழங்கப்படும் (19வது பிரிவு) | காணி அபிவிருத்தி செய்யப்பட்டு "கொள்வனவு விலை" தவணைப் பணம் செலுத்தி முடிந்ததும் நிரந்தர அளிப்புப் பத்திரம் (பிரிவு 19(4) |
| **அரச காணிகள் கட்டளைச்சட்டம்** | தற்காலிக குடியேற்றத்திற்காக அல்லது நடவடிக்கையொன்றுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் (2(4)) | விசேட நோக்கங்களுக்காக ( மதஞ்சார்/ கல்விசார்) "அ" மாதிரிப் படிவத்தின் மூலம் (form A) நிரந்தர வழங்கல் பத்திரம் வழங்கப்படும்.(6வது பிரிவு) |
| **காணி வழங்கல் சட்டம்** | காணியற்றவர்களை அடையாளம் கண்டு முதலில் அனுமதி வழங்கப்படும் | நேரடியாக ஜனாதிபதியின் கையொப்பத்துடன் "ஓ" மாதிரிப் படிவத்தில் (form K) நிரந்தர உரிமை கையளிக்கப்படும் (159(அ) பிரிவு |
| **காணி மறுசீரமைப்புச் சட்டம்** | சுவீகரிக்கப்பட்ட காணிகள் முதலில் பயிர்ச்செய்கைக்கான அனுமதிப்பத்திரங்களாக வழங்கப்படும். | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிரந்தர அளிப்பு பத்திரங்களாக மாற்றப்படும். |



**ரவிந்து- அரச காணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் (Permits) அல்லது அளிப்புப் பத்திரங்கள் (Grants) எவ்வாறான சந்தர்ப்பங்களில் இரத்துச் செய்யப்படலாம்?**

1. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் **(Land Development Ordinance - LDO)**

- **நிபந்தனைகளை மீறுதல்** - அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நிபந்தனையைப் பின்பற்றுவதற்கு அனுமதிப்பத்திரதாரர் தவறும் பட்சத்தில் (பிரிவு 106(1). இதில் காணியை அபிவிருத்தி செய்யாமை அல்லது குடியேறாமை போன்ற விடயங்கள் உள்ளடங்கும்.
- **கொடுப்பனவு செலுத்தத் தவறுதல்** - அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வருடாந்த தவணைப் பணம் (Annual Installment) அல்லது பிற குறிப்பிட்ட கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறுதல் (19(3) மற்றும் 129ஆம் பிரிவுகள்)
- **அனுமதியின்றி காணியை பிறருக்கு மாற்றுதல்** - அரசாங்கத்தின் முன்கூட்டிய எழுத்துமூல அனுமதியின்றி காணியை விற்பனை செய்தல். குத்தகைக்கு விடுதல், அடகு வைத்தல் அல்லது வேறு எந்த வகையிலும் பிறருக்கு மாற்றுதல் (46வது பிரிவு)
- **வாரிசுதாரர்கள் இல்லாமை** – காணியின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டப்படியான வாரிசுதாரரர்கள் உரிமையைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாமல் இருப்பது (104வது பிரிவு)
- **உண்மைக்குப் புறம்பான தகவல்கள்** - காணியைப் பெற்றுக்கொள்ளும்போது தகுதிகள் தொடர்பான போலியான தகவல்களை சமர்ப்பித்திருத்தல்.



2. அரச காணிகள் கட்டளைச் சட்டம் **(State Lands Ordinance - SLO)**

- **நிபந்தனைகளை மீறுதல்** - காணியை வழங்குகையில் அல்லது குத்தகைக்கு வழங்குகையில் விதிக்கப்படும் விசேட நிபந்தனைகளை - (உதாரணமாக மண்ணைப் பாதுகாத்தல், கட்டிட நிர்மாணக் கட்டுப்பாடுகள்) மீறுதல் (17(1) வது பிரிவு)
- **வரிப் பணத்தை செலுத்தத் தவறுதல்** - நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வரிப்பணம் அல்லது அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய நிலுவைப் பணத்தைச் செலுத்தத் தவறுதல் (86வது பிரிவு)
- **தனிப்பட்ட உரிமையை முடிவுறுத்தல்** - அனுமதிப்பத்திரம் பெற்ற நபர் இறக்கும்போது அதற்கான சட்டபூர்வமான வாரிசுதாரர் ஒருவர் பெயரிடப்படவில்லை எனின், அந்த உரிமை முடிவுக்கு வரும் (16வது பிரிவு)

3. காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் காணி மறுசீரமைப்பு சட்டம்

இச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணிகளை இரத்துச் செய்யும் நடைமுறையானது தற்போது பெருமளவில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

- **மாற்றமடைந்துள்ள சட்ட நிலைமைகள்** – காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய 1981ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க திருத்தத்திற்கமைய, இந்த விசேட சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் தற்போது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் அனுமதிப்பத்திரங்களாகக்

கருதப்படுகின்றன. எனவே, இக்கட்டளைச் சட்டத்தின் 106ஆம் பிரிவின் கீழ் நிபந்தனை மீறல்களின் அடிப்படையில் அவை இரத்துச் செய்யப்படலாம்.

- **காணி உரிமை தொடர்பான போலியான கூற்றுக்கள்** - காணியைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தான் ஒரு காணியற்றவர் (Landless) எனப் பொய்யான கூற்றுக்களை முன்வைத்திருத்தல்.

- **அபிவிருத்தித் தேவைகள்** - கையளிக்கப்பட்ட காணியை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பயிரிட அல்லது அபிவிருத்தி செய்யத் தவறுதல்.

நுவனி- மிக முக்கியமான விடயம் என்னவென்றால், இக்காணி உரிமை மீதான மட்டுப்பாடுகள் யாவை? அவற்றை பின்வருமாறு விளக்கலாம்.

- **தனிப்பட்ட உரிமை** - அரச காணிகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தனிப்பட்ட ரீதியானவை என்பதுடன், வாரிசுதாரரொருவர் பெயரிடப்படவில்லையெனில், உரிமையாளர் இறந்ததும் அந்த உரிமை முடிவுக்கு வரும் (SLO 16வது பிரிவு)

- **நிபந்தனைகளை மீறுதல்** - மண்ணைப் பாதுகாத்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால், காணியை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க முடியும் (SLO 17, 18 பிரிவுகள்)

- **அனுமதி** – அரசாங்கத்தின் அனுமதியின்றி காணியைத் துண்டுகளாகப் பிரிப்பதற்கோ அல்லது வேறொருவருக்கு மாற்றுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

**இரத்துச் செய்யும் நடைமுறை (பொதுவாக)** – எந்தவொரு இரத்துச் செய்தலுக்கும் முன்னர், சம்பந்தப்பட்ட நபருக்கு அது குறித்து 30 நாட்கள் முன்கூட்டியே அறிவித்தல் (Notice) வழங்கப்பட்டு, விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். (LDO 106,107 பிரிவுகள்) அரசாங்க அதிபரின் தீர்மானத்துக்கு எதிராக காணி ஆணையாளரிடம் மேன்முறையீடு செய்வதற்கும் பிரஜைகளுக்கு உரிமை உண்டு.

**உங்களிடமுள்ள காணி அனுமதிப்பத்திரத்தை நிரந்தர அளிப்பு பத்திரமாக (Grant) மாற்றிக்கொள்ள விரும்பினால், அது குறித்து உங்கள் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

கைவிடப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டிய விடயங்கள். அவை பின்வருமாறு,

1. உரிமையாளரால் 8 அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகளாக கைவிடப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க முடியும். (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் 1ஆம் பிரிவு மற்றும் 2(1) உப பிரிவுகள்)



2. காணியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் இது குறித்து அறிவித்தல் - வர்த்தமானி மற்றும் பத்திரிகைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பிரசுரித்தல் வேண்டும் அத்துடன் அக்காணியிலும் ஒரு அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட வேண்டும். (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் (2(2)வது பிரிவு)

3. குறித்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து உங்களது உரிமையை முன்வைப்பதற்கு குறைந்தது 12 மாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 (1)

4. அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் ஒவ்வொரு காணியும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் (9வது பிரிவு) காணியைப் பொறுப்பேற்கும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 30 ஆண்டுகள் கடக்கும் வரை உங்களது உரிமையை உறுதிப்படுத்த முடியுமாயின், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு சட்டரீதியான உரிமை உண்டு. (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10)

5. பொறுப்பேற்கும் நடைமுறையின்போது ஏற்படும் ஏதேனும் முறைகேடுகள் காரணமாக உங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பின், அரசாங்கத்துக்கு எதிராக நட்ட ஈடு கோருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 16)



யுத்தம் காரணமாக காணி அனுமதிப்பத்திரங்கள் அல்லது ஆவணங்கள் காணாமற்போயுள்ள சந்தர்ப்பங்களில் காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

உங்களது பெயர் மற்றும் முகவரியுடனான எழுத்துமூல உரிமைக் கோரிக்கையை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும். (காணிகளை மீண்டும் பொறுப்பேற்றல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 13) உங்களிடம் ஆவணங்கள் இல்லாவிட்டாலும், காணி உங்களுக்குச் சொந்தமானது என்பதைக் காட்டுவதற்கான ஏனைய அனைத்து சான்றுகளையும் சமர்ப்பிக்க உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். அரசாங்க அதிபர் அவற்றை பதிவு செய்ய வேண்டும் (4வது பிரிவு)



**அரசாங்க அதிபர் எனது உரிமையை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் எனக்குள்ள தீர்வு என்ன?**

உங்களது உரிமை குறித்து சந்தேகம் நிலவுமாயின், அந்த பிரச்சினையை விசாரணைக்காக மாவட்ட நீதிமன்றத்துக்கு கையளிக்க வேண்டும் (5வது பிரிவு) அங்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடுவதற்கும் சாட்சிகளை அழைப்பதற்கும் நீதிபதிக்கு அதிகாரம் உண்டு (11வது பிரிவு) நீதிமன்றத் தீர்ப்பில் திருப்பதியடையவில்லையெனில், முத்திரைக் கட்டணம் செலுத்தாது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு (5வது பிரிவு)





காணி ஏற்கனவே அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தால் இதற்காக எனக்கு எதனையாவது பெற்றுக்கொள்ள முடியுமா?

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் ஒவ்வொரு காணியும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் (9வது பிரிவு) காணியைப் பொறுப்பேற்கும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடையும் வரை உங்களுக்கு உங்களது உரிமையை உறுதிப்படுத்த முடியுமாயின், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு சட்டரீதியான உரிமை உண்டு (10வது பிரிவு)



அரசாங்கம் முறையான சட்ட முறைகளைப் பின்பற்றாமல் எனது காணியை பொறுப்பேற்றிருந்தால் என்னால் என்ன செய்ய முடியும்?



பொறுப்பேற்கும் நடைமுறையின்போது ஏற்படும் ஏதேனும் முறைகேடுகள் காரணமாக உங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பின், அரசாங்கத்திற்கு எதிராக நஷ்ட ஈடு கோருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு (16வது பிரிவு)

**முக்கியமானது - இந்தத் தகவல்கள் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டவை. விசேட சட்டப் பிரச்சினையின்போது தொழில்முறை சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகின்றது.**